





ஆரம்பம் 1969 பெப்ரவரி

அறிவோம்.. அறிவிப்போம்...

ISSN: 2012 - 6352 Reg. No.: 187317


# தொண்டன்

சமய – சமூக – இலக்கிய வெளியீடு

"செல்வருக்கும் வறியவருக்கும்
பொதுவான ஒன்று உண்டு.
ஏனெனில், அனைவரையும் உண்டாக்கியவர்
ஆண்டவரே"

– நீதிமொழிகள் 22:2





2021
2023



50/=

ஓகஸ்ட் – செப்டம்பர் – அக்டோபர் – 2022

# தொண்டன்

அறிவோம் ... அறிவிப்போம் ...

ஆரம்பம் – 1969 பெப்ரவரி

மலர் – 53 இதழ் – 06

ஓகஸ்ட்–செப்டெம்பர்–ஒக்டோபர்
– 2022 –

ஆசிரியர் :

■ அருட்தந்தை. நிகஸ்டன் பீற்றஸ்

துணையாசிரியர் :

■ பெஸ்லியோ வாஸ்

நூல் வடிவமைப்பு :

■ சுபாஜெனி சங்கர்

**வெளியீடு**

சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு மறைமாவட்டம்.

**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். – 44,
மட்டக்களப்பு.

**பதிப்பகம்**

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.






| | |
|---|---|
| மறைக்கல்வியின் இதயம் இறை ................. | 02 |
| மரம் வளர்ப்போம் . ................................. | 05 |
| கடுகுக் கதை .......................................... | 06 |
| மாணவர் பக்கம் ...................................... | 07 |
| இலக்கிய மஞ்சரி ..................................... | 08 |
| ஒரு வெண்மணற் கிராமம் ........................ | 10 |
| ஆயித்தியமலை நாயகியே ........................ | 13 |
| எதிர்மறைச் சூழலிலும் நேர்மையாய் ........... | 14 |
| ஆடும் பொம்மைகள் ................................ | 16 |
| நசுருங்கும் சுற்றமும் ................................ | 17 |
| கூட்டொருங்கியக்கத் திருஅவை .................. | 18 |
| மறைமாவட்ட கலைச் சிறிபியொன்று ............ | 20 |
| 2022 July 28 ......................................... | 22 |
| சோதனை ............................................... | 24 |
| போராட்ட வாழ்வை பூந்தோட்டமாக்க .......... | 25 |
| வினாவிடைப் போட்டி ................................ | 26 |
| திருவிவிலியம் கற்போம் ............................ | 27 |
| போட்டி முடிவுகள் ...................................... | 28 |



ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ–ர்)



SOCIAL COMMUNICATIONS CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL : 065 2226486
E-MAIL : battiscc@gmail.com


விலை: : 80/=

ஆண்டுச் சந்தா : 1440/=

(தபாற் செலவு உட்பட)

# அன்புடன் உங்களோடு ...

## உலக மறைபரப்பு ஞாயிறு

### You will be my witnesses - நீங்கள் என் சாட்சிகளாய் இருப்பீர்கள்

உலக மறைபரப்பு ஞாயிறு தினத்தை 2022.10.23 அன்று கொண்டாட இருக்கிறோம். எனவே நமது கத்தோலிக்க திருச்சபை இந்தநாளை மறைபரப்பு ஞாயிறாக எமது பங்குளிலும் கொண்டாட நம்மை அழைக்கிறது. இவ்வருட உலக மறைபரப்பு தின கருப்பொருள் "நீங்கள் என் சாட்சிகளாய் இருப்பீர்கள்" என்பதாகும். முன்பு இந்த ஞாயிறு, விசுவாசப் பரப்புதல் அல்லது வேதபோதக ஞாயிறென்றும் அழைக்கப்பட்டது. இவ்விசுவாச மறைபரப்புச்சபை 1822 ஆண்டு பிரான்ஸ் நாட்டில் லியோன் என்னும் நகரில் செல்வி மாரி பொலின் ஜெரிக்கோ என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. இச்சபையின் நோக்கம்: 'மறைபரப்பு சேவையில் ஈடுபட்டுள்ள மறைபரப்பாளர்களுக்கு செபத்தினாலும் ஒறுத்தலினாலும் ஒத்துழைப்பு வழங்கி மறைபரப்பு சேவையை எல்லா நாடுகளிலும் வளர்க்கவேண்டும் என்பதே. மறைபரப்பு ஞாயிறு ஆங்கிலத்தில் Mission Sunday என்று அழைக்கப்படுகிறது. Mission Sunday என்ற ஆங்கிலச் சொற்றொடரை அப்படியே மொழி பெயர்த்தால், 'அனுப்பப்படும் ஞாயிறு' என்று சொல்லலாம்.

மனித வரலாற்றில் நம் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட ஓர் இடம் உண்டு. நாம் பிறந்ததற்குத் தனிப்பட்ட ஒரு காரணம் உண்டு. நமக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள அந்தக் குறிக்கோளை வேறு ஒருவராலும் நிறைவேற்ற முடியாது. ஆகவே கிறிஸ்தவர்களாகிய எமது நோக்கம் நற்செய்தியை அறிவிப்பதே ஆகும். இயேசு தாம் போகவிருந்த ஊர்களுக்கு 72 சீடர்களை நற்செய்திப் பணிக்காகவும் குணமாக்கும் பணிக்காகவும் அனுப்புகின்றார். கிறிஸ்தவ நற்செய்தி அறிவிப்புப் பணியில் வேலை வாய்ப்பு இல்லாத சந்தர்ப்பமே இல்லை. ஒவ்வொருவருக்கும் தேவையான வேலைகளையும் பணிகளையும் கடவுள் வைத்திருக்கிறார். மற்றவர்கள் பணிசெய்வதை பின் நின்று பார்க்காமல் நாமும் நல்ல பணியாளர்களாக மாறி நல்ல கனிகொடுக்கும் மனிதர்களாக உருவாகவேண்டுமென்பதே இன்று எமக்கு கொடுக்கப்படும் அழைப்பு. இதை ஏற்று சாட்சியவாழ்வு வாழ்வோம்.
பேசவும் பார்க்கவும் இயலாமல் இருந்தாலும், தன் வாழ்வின் மூலம் சாதனைகளைப் புரிந்து வரலாற்றில் தனி இடம் பெற்றுள்ள அமெரிக்க எழுத்தாளராகிய கெலன் கெலர் அவர்கள் "என்னால் ஒரு சிலவற்றைச் செய்யமுடியும். எல்லாவற்றையும் செய்ய முடியவில்லை என்பதற்காக, நான் செய்யக் கூடிய சிலவற்றைச் செய்ய மறுக்க மாட்டேன்" எனக் கூறியுள்ளார்.

மறைபரப்பு ஞாயிறு என்றதும் அது வழக்கமாக குருக்கள், துறவியருக்கென ஒதுக்கப்பட்ட பணி என்று நம்மில் பலர் ஒதுங்கி விடுகிறோம். ஆனால், திருச்சபையின் ஆரம்ப காலத்தில் இறை வார்த்தையை, கிறிஸ்துவின் புதிய வழியை, வார்த்தைகளால் பறைசாற்றியதுடன் வாழ்வின் வழியாகவும் பறை சாற்றியவர்கள் ஆதிக் கிறிஸ்தவர்கள். இந்த ஆரம்ப கால கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோர் அப்போஸ்தலர்களோ, சீடர்களோ, குருக்களோ இல்லை, சாதாரண எளிய மக்கள். இவர்களது வாழ்வைப் பார்த்து வியந்தவர்கள் அதிகம்; அந்த வழியைப் பின்பற்றியவர்கள் அதிகம். பிரசங்கம், மறையுரை என்று பீடத்திலிருந்து, அல்லது ஒலிபெருக்கிகள் மூலம் முழங்கினால்தான் இறைவார்த்தையை, நற்செய்தியை, மறையைப் பரப்பமுடியும் என்பது மறைபரப்பின் ஒரு கண்ணோட்டமாக இருந்தாலும், Mission - அனுப்பப்படுதல் என்பதன் முழுமை இதைவிட மேலான பணியாகும். இங்கு புனித பவுல் 2 திமோ 4:2 கூறிய இறைவார்த்தையை நோக்கும் போது: "இறைவார்த்தையை அறிவி. வாய்ப்புக் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் இதைச் செய்வதில் கருத்தாயிரு". எனவே நமது பணிச் சூழல்களில் பகிரப்படும் இறை வார்த்தைகள் ஆழமான தாக்கங்களை உருவாக்குவதை நாம் கண்கூடாகக் காணலாம். மேடையிட்டோ, குழுக்களிலோ இறைவார்த்தையைப் பகிர்ந்துகொள்ள வாய்ப்பு இல்லாத போதும் இறைவார்த்தையை அறிவிக்கச் சொல்கிறார் பவுல் அடியார். வாழ்வினால் நாம் அறிவிக்கும் இறைவார்த்தைகள் மக்கள் மனதில் ஆழமாகப் பதியும்.

புனித பிரான்சிஸ் அசிசி ஆற்றிய மௌனமான மறையுரையைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம். தன் சீடர்களுடன் ஊரைச் சுற்றி அவர் மௌனமாக நடந்ததே அவ்வூர் மக்களுக்கு அரியதொரு மறையுரையானது. அதேபோல், Dr. Albert Schweitzer என்ற புகழ்மிக்க மருத்துவர் ஆப்ரிக்காவில் ஏழைகள் நடுவில் அற்புதமான பணிகள் செய்தவர். அவரை 'நடமாடும் ஒரு மறையுரை' என்று சொல்வார்கள். வேதபோதக நாடுகளின் பாதுகவலர்களாகிய புனித பிரான்சிஸ் சவேரியார் தன் போதனைகளால் பல்லாயிரம் உள்ளங்களை இறைவனிடம் அழைத்து வந்தார். புனித தெரேசா தன் செபங்களால் பல்லாயிரம் மனங்களை இறைவனிடம் கொணர்ந்தார். எனவே, நம்பிக்கை தரும் இறைவார்த்தைகளின் அடிப்படையில் மறைபரப்புப் பணியில், இறைவனைப் பறைசாற்றுவோர்களுக்காக செபிப்போம். எம்மால் முடியுமான ஒத்துழைப்புகளை எமது பங்கு மட்டத்திலே வழங்கி பங்குத் தந்தையர்களுடன் இணைந்து உலக மறைபரப்பிற்காக உதவிடுவோம். இறையாட்சியைக் கட்டியெழுப்ப நாம் முன் வருவோம்! இறையருள் பெறுவோம்!

- அதிபர் -



# இறைவார்த்தையாகும்

## Word of God is the Heart of Catechism



- பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை -
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்

குட்டித் திருஅவையாம் குடும்பத்திலிருந்து தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் அருள்பணியாளர்கள். கடவுள் முன் அருள்பணியும், மனிதரோடு சகோதர உறவும் அவர்கள் வாழ்வாகிறது. தங்கள் அழைத்தலாலும், திருநிலைப்பாட்டாலும் அருள்பணியாளர்கள் மக்களிடையே தனித்துவம் பெற்றுத் திகழ்கின்றனர்.

### அருள்பணியும் இறைவார்த்தையும்

மீட்பளிக்கும் வாக்கு நம்பிக்கை கொள்வோரின் உணவாகிறது. ”அறிவிப்பைக் கேட்டால்தான் நம்பிக்கை உண்டாகும். கிறிஸ்துவைப்பற்றிய செய்தி அறிவிக்கப்பட்டால்தான் அதைக் கேட்க வாய்ப்புண்டு” (உரோ 10:17) எனும் பவுலடியாரின் கருத்திற்கேற்ப இறைக்குலம் உருவாகி வளர்கிறது. அருள்பணியாளர்கள் நற்செய்திப் பகிர்தலில் அகமகிழ்கின்றனர். நன்னடத்தையில் கவனமாக உள்ளனர். கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு, நற்செய்தியை அறிவிக்கின்றனர். சிறுவர்களுக்கு மறைக்கல்வி புகட்டுகின்றனர். தங்கள் காலத்தின் சிக்கல்களை கிறிஸ்துவின் ஒளியில் ஆராய முயல்கின்றனர். இன்றைய உலகச் சூழ்நிலையில் அருள்பணி பல சவால்களைச் சந்திக்கும் கடினமான பணியாகவே உள்ளது. நற்செய்தி உண்மைகளை நடைமுறை வாழ்க்கைக்கேற்ப விளக்க வேண்டியுள்ளது. கிறிஸ்தவம் பரவாத பகுதிகளில் நற்செய்திப் போதனையால் கிறிஸ்தவ நம்பிக்கையும், அருளடையாளம் பெறுவதில் ஆர்வமும் பிறக்கிறது. நற்செய்தி உலகெங்கும் பறைசாற்றப்படுகிறது. திருமுழுக்கால் நம்பிக்கை கொண்டோர் நாள்தோறும் பெருகிவருகின்றனர். ஆனால் கடக்க வேண்டிய தூரம் அதிகமாகவே உள்ளது. மீட்புப் பெற வேண்டியவர் ஏராளமாக உள்ளனர்.

### அருள்பணியாளர் அருளடையாள வாழ்வை நிறைவு செய்கின்றனர்

கிறிஸ்தவர் பல நாடுகளில் சிறுபான்மையினராகவே இருக்கின்றனர். “அறுவடையோ அதிகம் வேலையாட்களோ குறைவு” (லூக் 10:2) என்ற இறைவாக்கிற்கேற்ப அருள்பணியை உவந்து ஏற்பவர் குறைவாகவே உள்ளனர். குறைபட்ட நம்பிக்கை கொண்ட கிறிஸ்தவருக்கு அருளடையாளம் வழங்கும்போது இறைவார்த்தைப் போதனையும் தேவைப்படுகிறது. தங்கள் இறைவேண்டலாலும், அருளடையாளத்தைப் பெற்றுக்கொள்வதாலும்

நம்பிக்கை கொண்டோர் கிறிஸ்துவின் தியாகப் பலியில் ஒன்றிக்கிறார்கள்.

தூயவரும் தூய்மைப்படுத்துகிறவருமான கடவுள் அருள்பணியாளர்களைத் தூய்மைப் படுத்தும் பணிக்கு திருநிலைப்படுத்துகிறார். அவர்கள் திருமுழுக்கினால் மனிதர்களை இறைகுலமாக மாற்றுகின்றார்கள். ஒப்புரவு அருளடையாளத்தால் பாவிகளை கடவுளோடு ஒப்புரவாக்குகிறார்கள். நோயில் பூசித் துன்பத் தைத் தணிக்கிறார்கள். திருப்பலியை தூய்மை மிகு நற்கருணையில் இணைத்து ஒப்புக்கொடுக் கிறார்கள். திரு அவையின் அருள்வளம் முழுவ தும் நற்கருணையில் அடங்கியிருக்கிறது.

இவ்விதமாக அருட்சாதனங்களைப் பெறும் ஒவ்வொருவரும் நற்செய்தியை அடிப்படையாகக் கொண்ட மறைக்கல்வியை பெறுகின்றனர். இறைவேண்டல் உணர்வு வாழ்நாளெல்லாம் உடன்வர அருள்பணியாளர்கள் மக்களை வழி நடத்துகின்றனர். கடமைகளை நிறைவேற்ற, நற்செய்தியைக் கடைப்பிடிக்க, புகழ்பாக்கள், நன்றிகீதம் பாட மக்களுக்குக் கற்பிக்கின்றனர். அல்லது தங்களது வலது கரங்களாகச் செயல்படும் நற்செய்திப் பணியாளர்களின், பயிற்றப்பட்ட மறைக்கல்வி ஆசிரியர்களின் துணைகொண்டு நிறைவான மறைக்கல்வியைப் புகட்டுகின்றனர். அருள்பணியாளர்களும், நம்பிக்கை கொண்டோரும் அனைத்துலகும் மீட்படைய கடவுளை மன்றாடுகின்றார்கள்.

கிறிஸ்து திருச்சபையின் தலைவரும் மேய்ப்பருமாய் இருக்கிறார். அருள்பணியாளர்கள் ஞான அதிகாரம் பெற்றவர்கள். கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றி சிறந்த மனிதப் பண்பு கள் பழக அருள்பணியாளர்கள் அழைக்கப் படுகிறார்கள். கிறிஸ்தவக் கோட்பாடு ஒளிரும் வண்ணம் அவர்கள் மனிதரிடையே வாழவேண்டும். "வாய்ப்புக் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும், இதைச் செய்வதில் நீ கருத்தாயிரு. கண்டித்துப் பேசு. கடிந்து கொள். மிகுந்த பொறுமையோடு கற்றுக்கொடு (2 திமொ 4:2) என்ற திருத்தூதரின் சொற்களுக்கிணங்க அருள்பணியாளர்கள் பணியாற்றுகின்றனர்.

**அருள்பணியும் இறைவார்த்தை மையமும்**

மறைக்கல்வி என்பது பிறப்பு முதல் இறப்பு வரை தொடர வேண்டிய ஒரு முயற்சியும் பயிற்சி யுமாகும். இது வாழ்நாளெல்லாம் தொடர்ந்து நடைபெற்று நமது நம்பிக்கை வாழ்வில் வளர்ச்சியையும் அளிக்க வேண்டும். எனவே, இது வகுப்பறைக்கோ, சிறார்களுக்கோ மட்டுமே உரியது என்னும் புரிதல் தவறானது. இது மனித வாழ்வின் எல்லா நிலைகளிலும் சூழலிலும் தொடர்ந்து நடைபெற வேண்டியதும் தவிர்க்க முடியாததுமாகும். ஒவ்வொரு பருவத்தினருக்கும் அவர்தம் வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கும், தேடல்களுக்கும் ஏற்பத் தழுவி அமைத்து இது தரப்பட வேண்டும். திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் நம்பிக்கையை ஆய்ந்த நிலையும், தனிப்பட்ட முறையில் கிறிஸ்துவோடு உள்ள உறவில் வளரவும், நம்பிக்கைகளில் சாட்சிகளாய் திகழவும், இறையாட்சி சமூக உருவாக்கப் பணியில் ஈடுபாடும் கடமையும் உரிமையும் கொண்டவர்கள் நம் மக்கள் என்பதை உணர்ந்து வாழ ஒவ்வொரு பொது நிலையினருக்கும் தரப்பட்ட வாய்ப்பு என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

**திருவிவிலியமும் இறைவார்த்தையும்**

உலகம் போற்றும் ஓர் உயர்ந்த நூல் விவிலியம். அகில உலக அனைத்து மொழிக ளிலும், அனைத்து மக்களுக்கும், அனைத்து கலாச்சாரங்களுக்கும் சொந்தமாகிவிட்ட சிறப்புத் தன்மையைக் கொண்டுள்ளது விவிலியம். விவிலியம் மக்கள் புத்தகம். ஏனெனில் கடவுள் - மக்கள் உறவைப்பற்றி கூறும் நூல் விவிலியம். விவிலியத்தின் மையக்கருத்து என்னவென்றால் கடவுள் மானிட குலத்தின்மீது கொண்ட அன்பு ஈடுபாட்டின் வரலாறுதான் விவிலியம்.

விவிலியத்தைப் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரண்டாகப் பிரிக்கலாம். ஏற்பாடு என்றால் கடவுளுக்கும், மானிட குலத் திற்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கைதான் ஏற்பாடு என்று அழைக் கப்படுகிறது.

பழைய ஏற்பாட்டில், கடவுள் இஸ்ராயேல் மக்களைத் தேர்ந்துகொண்டார். அவர்களுடைய இன்ப துன்பங்களில் பங்கேற்றார். அவர்களைப் பாராட்டியும் கண்டித்தும் வழிநடத்தினார். இவ்வாறு கடவுள் இஸ்ரயேல் உறவு பல்வேறு

நிகழ்ச்சிகளில் விளக்கப்படுகிறது. இதுவே பழைய ஏற்பாட்டில் கடவுள் இஸ்ரயேல் உறவாகும்.

புதிய ஏற்பாட்டில் இறைவன் இயேசு உலகில் பிறந்து மக்களோடு வாழ்ந்தார். தன் போதனைகளாலும் செயல்களாலும் இறையரசை ஏற்படுத்தினார். தன் மீட்புப் பணியில் நிறைவாக சிலுவையில் அறையப்பட்டு இறந்தார். மீண்டும் உயிர்த்து தன் மீட்புப் பணி தொடர திருஅவையை ஏற்படுத்தினார். இவ்வாறு கடவுள் மனித உறவு புதிய ஏற்பாட்டில் விளக்கப்படுகிறது.

**இறைவார்த்தையே மறைக்கல்வியின் இதயமாகும்**

இறைவன், தன் இறை ஏவுதல் பெற்ற மனிதர்களைக் கருவிகளாகப் பயன்படுத்தி விவிலியத்தை எழுதி இருக்க முடியும். இறை ஏவுதல் பற்றி விவிலியம் தரும் பல்வேறு ஆதாரங்களில் சிறப்பாகக் கருதப்படுபவைகள் இரண்டு:

1. மறைநூலில் உள்ளதெல்லாம் கடவுளால் ஏவப்பட்டது. போதிக்கவும், கண்டிக்கவும், சீர்திருத்தவும் கடவுளுக்கு ஏற்ப வாழ்வில் மக்களைப் பயிற்றவும் அது பயன்படும் *(2 திமொ 3:16)*.
2. இறைவாக்கு ஒருபோதும் மனிதரின் விருப்பத்தால் உண்டானது இல்லை. மனிதர் தூய ஆவியால் தூண்டப்பட்டு கடவுளின் ஏவுதலால் பேசினர் *(2 பேது 1:20-21)*

* கி.மு 10ம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2ம் நூற்றாண்டு வரை இருந்த காலகட்டத்தில் விவிலியத்தின் பல்வேறு நூல்கள் எழுதப்பட்டன.

* விவிலியம் இறைவார்த்தை என்று சொல்வது சரியாகும. ஏனென்றால், விவிலியம் கடவுளின் வார்த்தைகள்தான். கடவுளின் ஏவுதலால் எழுதப்பட்டதாலும், கடவுளைப் பற்றிய பல்வேறு உண்மைகளை எடுத்துரைப்பதாலும், கடவுளே பலமுறை விவிலியத்தில் பேசியிருப்பதாலும் விவிலியம் கடவுளின் வார்த்தையே. கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது: ஆற்றல் மிக்கது: இரு பக்கமும் கருக்கு வாய்ந்த எந்த வாளிலும் கூர்மையானது. ஆன்மாவின் உள் ஆழத்தையும், ஆவியின் உள் ஆழத்தையும் ஊடுருவுகின்றது. மூட்டு, மூளை வரை எட்டுகிறது. உள்ளத்தின் கருத்துக்களையும் எண்ணங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது. *(காண் எபி 4:12, 2 திமொ 3:16-17)*

## ஐக்கிய இராச்சியத்தின் இரண்டாம் எலிசபெத்



இரண்டாம் எலிசபெத் மகாராணி 1952 பெப்ரவரி 6 முதல் 2022 இல் இறக்கும் வரை ஐக்கிய இராச்சியத்தின் அரசியாக இருந்தார். இவரது 70 ஆண்டுகள், 214 நாட்கள் என்ற மொத்த ஆட்சிக்காலம் எந்த ஒரு பிரித்தானிய மன்னரிலும் மிக நீண்டதாகும். எலிசபெத் இறக்கும் போது, ஐக்கிய இராச்சியம் தவிர 14 பொதுநலவாய நாடுகளின் ராணியாகவும் இருந்தார். எலிசபெத் மகாராணி இலண்டன், மேஃபெயார் என்ற இடத்தில் யோர்க் கோமகன் ஆல்பர்ட்டிற்கும் எலிசபெத்திற்கும் முதல் குழந்தையாக 1926 ஏப்ரல் 21 இல் பிறந்தார். தனது கொள்ளுப்பாட்டி அலெக்சாந்திரா, பாட்டி மேரி, தாய் எலிசபெத் ஆகியோரின் பெயர்களைச் சேர்த்து எலிசபெத் அலெக்சாந்திரா மேரி என்று பெயர் சூட்டப்பட்டார். நவம்பர் 1947 இல், இவர் கிரேக்கம் மற்றும் டென்மார்க்கின் முன்னாள் இளவரசர் பிலிப் மவுண்ட்பேட்டனை மணந்தார். இவர்களுக்கு மூன்றாம் சார்லஸ், இளவரசி ஆன், யோர்க் கோமகன் இளவரசர் ஆண்ட்ரூ, வெசெக்சு கோமகன் இளவரசர் எட்வர்ட் என நான்கு பிள்ளைகள் உள்ளனர். 1952 பெப்ரவரியில் இவரது தந்தை இறந்தபோது, அகவை 25 ஆக இருந்த எலிசபெத் ஐக்கிய இராச்சியம், கனடா, ஆத்திரேலியா, நியூசிலாந்து, தென்னாப்பிரிக்கா, பாக்கித்தான், இலங்கை ஆகிய ஏழு விடுதலை பெற்ற பொதுநலவாய நாடுகளின் ராணியானார். இவரின் பல வரலாற்றுச் சிறப்பு மிக்க வருகைகளிலும் சந்திப்புகளிலும், 1986 இல் சீனாவிற்கும், 1994 இல் உருசியாவிற்கும், 2011 இல் அயர்லாந்து குடியரசிற்கும், ஐந்து திருத்தந்தைகளுடனான சந்திப்புகளும் முதன்மையானவை.

உலக வரலாற்றில் பிரான்சின் பதினான்காம் லூயிக்குப் பின்னர் இரண்டாவது மிக நீண்ட காலம் ஆட்சி புரிந்தவர். இரண்டாம் எலிசபெத் மகாராணி அவர்கள் 2022 செப்டம்பர் 8 இல் தனது 96-ஆவது அகவையில் அபர்டீன்சயர், பால்மோரல் அரண்மனையில் காலமானார். அவருக்குப் பிறகு அவரது மூத்த மகன் மூன்றாம் சாள்ஸ் மன்னரானார்.

தகவல்: **விக்கிபீடியா**

# மரம் வளர்ப்போம்!



அருட்பாவலர் நிலா தமிழின்தாசன்



மழை வளம் பெருகுதற்கும்
 மண் வளம் சிறப்பதற்கும்
நிழல் வரம் பெறுவதற்கும்
 நீர் வளம் உயர்வதற்கும்
பழமொடு காய்கள் எங்கும்
 பசுமையும் பூப்பதற்கும்
அழகது பூமி எங்கும்
 அணி செய்ய மரம் வளர்ப்போம்!

தெங்கொடு தேமா நல்ல
 தீஞ்சுவைப் பலா சீர்வாழை
எங்ஙனும் வேப்புலுப்பை
 இடையிடை தேக்கு நாவல்
மங்கிடா முதிரை, விளினை
 மலர்சொறி கொன்றை, பாலை
பொங்குநற் புளியும், புன்னை
 பொலிந்திட மரம் வளர்ப்போம்!

வேலியில் முருங்கை, வாகை
 விரிந்துயர் கிழவை, காயான்
மூலிகைச் செடிகள் பூத்து
 மோகனஞ் செய்யும் அலரி
நாலினம் நட்டால் எம்மை
 நறுமணம் சூழும் நித்தம்
ஆலொடு, அரசு, வம்மி
 ஆலய வெளிக்கு வைப்போம்!

மரமுயர் திணையே என்று
 வரைந்தனன் 'கவிக்கோ ரகுமான்'
வரமது மரந்தான் மண்ணில்
 வாழுமோ உயிரஃதின்றி!
உரமிகு பனைக்கு ஈடாய்
 உலகினில் வேறேதுண்டோ?
மரம்நடு மனிதா உந்தன்
 வாழ்வுயர் வாகும் உண்மை




கொல்கத்தா புனித அன்னை தெரேசா அவர்கள், 45 ஆண்டுகளாக ஏழைகள் மற்றும், துன்புறுவோருக்கு ஆற்றிய அரும்பணிகளை அங்கீகரிக்கும் விதமாக, அவர் இறைபதம் (1997) சேர்ந்த செப்டம்பர் 5ம் நாளை, ஐ.நா. பொது அவை 2012ஆம் ஆண்டில் பிறரன்பு உலக நாளாக அறிவித்தது. அதற்கமைய இவ்வருடம் செப்டம்பர் 05ம் திகதியன்று புனித அன்னை தெரேசா இறைபதம் அடைந்த 25ம் ஆண்டு நினைவுகூரப்பட்டது. பிறரன்பு உலக நாளை மையப்படுத்தி திருத்தந்தை வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில், "ஒரு சிறிய அளவையும் அன்போடு பகிர்ந்துகொண்டால், அது ஒருபோதும் முடிவுறாது, மாறாக, அது வாழ்வு மற்றும், மகிழ்வின் ஊற்றாக மாறும். நாம் வழங்கும் தர்மங்கள், சிறியவையோ பெரியவையோ எதுவானாலும், அவற்றை மகிழ்வு மற்றும், எளிமையோடு வழங்கும்போது, அவை இவ்வாறு மாறும்" என்ற வார்த்தைகள் இடம்பெற்றிருந்தன.

# நல்ல நடிகர்கள்




- மற்றி

அன்ரனின் நண்பர் ஒருவர், நீண்ட காலத்தின் பின் அவரைச் சந்திக்க வந்திருந்தார். அவருக்கு ஐந்து பிள்ளைகள் உள்ளார்கள்; மூத்த பெண் திருமணம் செய்துவிட்டார். ஏனைய நால்வரும் படித்துக்கொண்டிருந்தார்கள். அவரும் அரச உத்தியோகத்தர்; அவரின் தனி வருமானத்தில்தான் குடும்பம் ஓடுகின்றது.

சராசரி நடுத்தர வகுப்புப் பிரிவின் கீழ்மட்ட வருமானம் உள்ள குடும்ப வகுப்பைச் சேர்ந்தவர்தான் அவர். அரச உத்தியோகம் பார்க்கும் கணிசமானவர்கள் அப்படியான வகுதிக்குள்தான் அடங்குவர். வாழ்க்கைச் செலவு 'எகிறிக்கொண்டு' இருக்கும் இக்காலகட்டத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் பற்றி அவர் அன்ரனுடன் கலந்துரையாடிக்கொண்டிருந்தார்.

"மச்சான், கலியாண காட் வந்தா போகனும். ஒரு சாப்பாடு இரண்டாயிர ரூபா எடுக்கிறதால 'என்வலப்பில' ஐயாயிரமாவது வைக்கனும். பிள்ளைகளிண்ட சி.ஆர். கொப்பிகள்ற விலையே ஐநூறு ரூபா தாண்டுது. சாப்பாட்டுச் சாமான் விலைகள் ஒவ்வொரு நாளும் கூடிக்கொண்டே போகுது.... பெற்றோல் விலையும் கூடிற்று. விலைச்சூத்திரம் விலை கூடுவதற்கு மட்டும் பயன்படுத்தப்படுது விலை குறைப்பதற்கு இல்ல.... ஆனா சம்பளம் கூடவே இல்ல; வரிகள்தான் கூடுது. என்ற அடுத்த வீட்டுக்காரன் ஒரு மேசன்; மாடிவீடு கட்டியிருக்கான். வாகனம் வச்சிருக்கான் அவனுக்கு இந்திய உதவித்திட்டச் சாமான்கள் கிடைக்குது ஆனா... எனக்கு இல்ல; அரசாங்க உத்தியோகமாம்...."

என்று நடைமுறைச்சிக்கலைப்பற்றி கவலைப்பட்டுக் கதைத்தார்.

தான் மனதுக்குக்குள் நினைத்துக்கொண்டிருந்த காரியங்களை நண்பர் மனம்விட்டு கூறியது அன்ரனுக்கும் ஆறுதலாய்தான் இருந்தது, 'நாம எல்லாம் விருது வாங்கக்கூடிய நல்ல நடிகர்கள் தாம்' என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டார்.



# உலக கல்வியறிவு நாள்

செப்டம்பர் மாதம் 08ம் திகதி சிறப்பிக்கப்பட்ட 'உலக கல்வியறிவு நாளு'க்குத் திருத்தந்தையின் சிந்தனைகளை உள்ளடக்கி, திருத்தந்தையின் பெயரால், ஐ.நா.வின் யுனெஸ்கோ நிறுவன தலைமை இயக்குனர் Audrey AZOULAY அவர்களுக்கு திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்கள் அனுப்பியுள்ள செய்தியில், 'நல்லிணக்கம், ஒன்றிப்பு, தோழமை, உடன்பிறந்த உணர்வு, நிலைத்த அமைதி ஆகியவற்றின் கலாச்சாரத்தைக் கட்டியெழுப்ப, உலகில் கல்வி கற்பிக்கப்படும் முறைகளில் மாற்றத்தைக் கொணர மேற்கொள்ளப்பட்டுவரும் ஆய்வுகளும் முயற்சிகளும் உதவும்' என்ற தன்நம்பிக்கையைத் தெரிவித்துள்ளார்.

மேலும் இச்செய்தியில், கல்விக்காக தங்களை அர்ப்பணித்துள்ள அந்நிறுவனத்தாருக்கு, திருத்தந்தை இறையாசிரை இறைஞ்சுவதாகவும் பல்வேறு நெருக்கடிகளால் நிறைந்துள்ள இன்றைய உலகில் மாற்றத்தைக் கொணர எடுக்கப்படும் முயற்சிகளுக்கு, எல்லாரையும் உள்ளடக்கிய ஒரு கல்விமுறை தேவைப்படுகின்றது எனவும், இதனாலேயே 'கல்விக் கிராமம்' என்ற ஓர் அமைப்பு கட்டியெழுப்பப்படவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது எனவும் இதனாலேயே திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஓர் உலகளாவிய கல்வி ஒப்பந்தத்தில் அனைவரும் கையெழுத்திடுமாறு அழைப்புவிடுக்கிறார் என்றும் கர்தினால் பரோலின் அவர்கள் கூறியுள்ளார்.

இன்றும் உலகில் 77 கோடியே 10 இலட்சம் பேர் எழுத, வாசிக்கத் தெரியாதவர்கள் என ஐ.நா. கூறியுள்ளது.

- திருஅவை

கிறிஸ்தவம்

கனாத ஊற்றம்

# மாணவர் பக்கம்



மாதிரி வினாத்தாள் - பகுதி - 1

**தொடர்** XIII

- நில்மினி கஜேந்திரன்

**மாணவர் பக்கம்**

மே-ஜூன்-ஜூலை - 2022

விடைகள்

| | | |
|---|---|---|
| 1) 3 | 5) 4 | 9) 3 |
| 2) 5 | 6) 2 | 10) 2 |
| 3) 2 | 7) 1 | |
| 4) 3 | 8) 2 | |

**1. எசாயா என்பதன் பொருள் யாது?**

1. இறை அன்பு 2. இறை மகிமை 3. இறை பராமரிப்பு
4. யாவே மீட்பர் 5. நானே உன் கடவுள்

**2. யோத்தாம், செக்கரியா, ஆகாஸ் ஆகிய யூத மன்னர்களின் ஆட்சிக் காலத்தோடு தொடர்புடைய இறைவாக்கினர்.**

1. எசேக்கியேல் 2. எரேமியா 3. எசாயா 4. ஆமோஸ் 5. அமட்சியா

**3. இறைவாக்கினரின் அழைப்பில் காணப்படும் பொதுப் பண்புகள் எத்தனை?**

1. நான்கு 2. ஒன்று 3. ஐந்து 4. மூன்று 5. இரண்டு

**4. பழைய ஏற்பாட்டில் தலைவர்களுக்கு இறையூக்கம் கொடுக்கப்பட்ட காரணம்.**

1. தம்மைப் பிரபலப்படுத்த 2. இறைவாக்கு மற்றும் ஆட்சிப்பணிக்கு
3. சமுதாய வளர்ச்சிக்கு 4. தாம் அறிவு படைத்தவர் எனக் காட்ட
5. தலைவர்கள் தொகையினை அதிகரிக்க

**5. யோசியா, யோயாக்கிம், செதேக்கியா ஆகிய அரசர்களின் காலத்தோடு தொடர்புடைய இறைவாக்கினர் யார்?**

1. ஆமோஸ் 2. நாத்தான் 3. அபகூக் 4. எரேமியா 5. எசாயா

**6. குருக்கள் குலத்தைச் சேர்ந்த பூசி என்பவரின் மகன் யார்?**

1. ஆமோஸ் 2. ஓசே 3. ரூத் 4. தெபோறா 5. எசேக்கியேல்

**7. எசேக்கியேலின் விசேட பண்பாக விளங்கியது.**

1. நீண்ட நேரப் போதனை 2. அனுபவங்கள் மூலம் செயற்படல்
3. காட்சி, உவமை, அடையாளம் மூலம் இறைவாக்குரைப்பது
4. நண்பர்களுக்கு மட்டுமே போதிப்பது 5. இறைசித்தத்தின்படி நடக்காதது

**8. எசேக்கியேலை ஆண்டவர் எதனால் தைரியப்படுத்தினார்?**

1. நீண்ட போதனை மூலம் 2. பாவத்திலிருந்து பிரித்து
3. ஏட்டுச்சுருளை புசிக்க வைத்து 4. கைவைத்து ஆசீர்வதித்து 5. திருமுழுக்கு கொடுத்து

**9. ஆடு மேய்த்தல், அத்தி வளர்த்தல் என்பவற்றை தன் தொழிலாகக் கொண்டிருந்த இறைவாக்கினர்.**

1. ஓசே 2. ஆமோஸ் 3. எசாயா 4. நாகூம் 5. ஆபகூக்

**10. ஓசேயின் பிள்ளையான ஜெஷ்ரேயேல் என்பவருக்குரிய அடையாளப் பெயராய்க் குறிப்பிடப்படுவது.**

1. இறைவன் விதைக்கிறார் 2. இறைவன் மீட்பார் 3. இரக்கம் பெற்றவன்
4. அன்பில்லாதவன் 5. இறைஊழியன்

- வேகமாகப் போவது முக்கியமில்லை. சரியான பாதையில் போவதுதான் முக்கியம்; அப்போதுதான் நாம் போய்ச் சேரவேண்டிய இடத்துக்குப் போய்ச் சேருவோம். முக்தி அடைவதற்குரிய சாதனைக்கும் இது பொருந்தும்.
- செல்வம் நமது வறுமைகாலத்தில் உதவுகிறது. அதுபோலவே புண்ணியம் நமக்கு ஏற்படும் துன்பங்களிலிருந்து நம்மைக் காப்பாற்றும்.

# இலக்கிய மஞ்சரி



## அழகரசன் அடிகளாரின் நூல் வெளியீடும் கே.எஸ். சிவகுமாரன் அவர்களின் மறைவும்...

- ஆழியோன்



இம்முறை இலக்கிய மஞ்சரியில் இரண்டு விடயங்கள் பற்றிப் பார்க்கவிருக்கின்றோம்.


முதலாவது திருகோணமலை - மட்டக்களப்பு மாவட்ட குருவான காலம்சென்ற அருட்பணி கலாநிதி. அன்ரனி ஜோன் அழகரசன் அடிகளாரின் நான்கு நூல்கள் அறிமுக விழா. மற்றையது, செப்டம்பர் மாதம் 15ம் திகதி அமரத்துவம் அடைந்த மட்டக்களப்பின் மகன் கலை, இலக்கிய திறனாய்வாளர் கே. எஸ். சிவகுமாரன் பற்றிய சில குறிப்புகள்...



மட்டக்களப்பு கல்லாறுப் பங்கைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட்தந்தை அன்ரனி ஜோன் அழகரசன் அவர்கள் 1939.08.30ம் திகதியன்று பெரிய கல்லாறில் பிறந்தார். கல்லாறு புனித அருளானந்தர் பாடசாலை பின்னர் மட்டக்களப்பு புனித.மிக்கேல் கல்லூரி என்பனவற்றில் தனது பாடசாலைக் கல்வியைப் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து கண்டி அம்பிட்டிய குருத்துவக் கல்லூரி, தமிழக பச்சையப்பன் கல்லூரி, சென்னை பல்கலைக்கழகம் அமெரிக்காவின் ஹாவாட் பல்கலைக்கழகம் என்பனவற்றில் இறையியல் மற்றும் உயர் கல்வியைப் பெற்றுக்கொண்டார். தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் 24 நூல்களை வெளியிட்டுள்ளார். 2020 ஜனவரி பதினாறாம் திகதி அடிகளார் ஜேர்மனியில் உள்ள அவரது தம்பியார் போதகர் முகில்வாணன் இராசப்பா அவர்களின் இல்லத்தில் இறைவனடியைத் தரிசிக்கப் புறப்பட்டுவிட்டார்.

அவரது அமரத்துவத்தின் பின் அவரின் நான்கு நூல்கள் 17.09.2022 அன்று மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில், செங்கலடி மறைக்கோட்ட முதல்வர் செபஸ்டியன் இக்னேசியஸ் அடிகளின் தலைமையில் பிரதம அதிதியான மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை அவர்களின் முன்னிலையில் வெளியிட்டு வைக்கப்பட்டன.

அவரின் **திராட்சைத் தோட்டத்திலே, புரட்சிக் கிறிஸ்து, அன்னை மரியாயின் ஆரோபண இல்லம், நம் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு** ஆகிய நூல்களின் நயவுரைகளை முறையே மகுடம் வி. மைக்கல்கொலின், ரூபி வலன்ரினா பிரான்சிஸ், கவிஞர் அன்பழகன் குரூஸ், ஆர். பெஸ்லியோ வாஸ் ஆகியோர் வழங்கினார்கள். ஆயர் அவர்கள் தமது உரையில், ‘அருட்பணி அன்ரனி ஜோன் அழகரசன் அடிகளாரையும் அவரது எழுத்துக்களையும் அனைவரும் உ2ண்டுகளை அமெரிக்காவில் கழித்துள்ளார். ‘தொண்டன்’ சஞ்சிகையின் ஆசிரியராக அடிகளார் பணியாற்றியபோது பத்திரிகை வடிவில் வந்த ‘தொண்டன்’ சஞ்சிகை வடிவில் மாற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ஏற்பாட்டுக் குழுவின் இணைப்பாளர் G.J. சாந்திகுமார் வரவேற்புரை வழங்கியதும் குறிப்பிடவேண்டியதாகும்.



அமரர் கே.எஸ். சிவகுமாரன்

இலக்கிய திறனாய்வாளர், ஊடகவியலாளர், மொழிபெயர்ப்பாளர் என பண்முக ஆளுமைமிக்க கே.எஸ்.சிவகுமாரன் அவர்கள் 2022 செப்டம்பர் மாதம் 15ம் திகதி தனது எண்பத்தாறாவது வயதில் கொழும்பில் அமரத்துவம் அடைந்த செய்தி அதிர்ச்சியைத் தந்தது.

தமிழ், ஆங்கில ஊடகத்துறை இவரின் மறைவால் பாதிக்கப்பட்டுள்ளது என்பது உண்மை. 1936ம் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி மட்டக்களப்பில் பிறந்த இவர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின் மாணவர். பிரபல திரைப்பட இயக்குநர் பாலுமகேந்திரா அவர்களின் உற்ற தோழன். பிறரின் எழுத்துகளையும், இலக்கியப் பணிகளையும் உவப்பு-வெறுப்பு இரண்டையும் தமது பத்தி எழுத்துகளில் அறிமுகம் செய்தவர். 'பத்தி' எழுத்து என்ற பதத்தை அறிமுகம் செய்ததும் இவர்தான். 'ஞானம்', 'மல்லிகை' போன்ற சஞ்சிகைகள் கே. எஸ் சிவகுமாரனின் படத்தை அட்டைப் படமாக வெளியிட்டிருந்தன.

இலங்கை வானொலியிலும், 'தி லெஜன்ட்', 'வீரகேசரி', 'டெய்லி நியூஸ்' போன்ற பத்திரிகைகளிலும் பணியாற்றினார். வர்த்தகசேவையில் பகுதிநேர அறிவிப்பாளராகவும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் மொழிபெயர்ப்பாளராகவும், துணையாளராகவும் பணியாற்றியவர்.

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி, பேராதனைப் பல்கலைக்கழகம் என்பவற்றின் பழைய மாணவராவார். இவர் எழுதிய 'அசையும் படிமங்கள்', 'சினிமா ஒரு உலகவலம்' ஆகிய நூல்கள் சினிமா பற்றியவையாகும். இவர் 'சினிமா' என்ற பதத்தைப் பயன்படுத்தாமல் 'சினமா' என்றுதான் பயன்படுத்துவார். இவரது 'இருமை', 'சிவகுமாரன் கதைகள்' ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. இவரின் அமைதி, அடக்கமான மென்மையான சுபாவம், தன்னடக்கம் என்னையும் ஏனையோரையும் கவர்ந்திருந்தன. 2016ல் நான் புனித மிக்கேல் கல்லூரியின் அதிபராக இருந்தபோது தனது பழைய பாடசாலையை தரிசிக்க வந்த கே.எஸ். சிவகுமாரன் அவர்கள் என்னுடன் சில மணித்தியாலங்களை செலவு செய்தமை பற்றி இன்றும் பெருமைகொள்கிறேன். அவரின் நித்திய இளைப்பாற்றிக்காக பிரார்த்தனையும் செய்கிறோம். என்னே அருமையான மனிதர்!

---

**"இந்த உலகில் துன்பங்கள் நிறைய இருந்தாலும், அவற்றை சமாளிப்பதற்கு வழிகளும் இங்கே இருக்கின்றன"** – ஹெலன் கெல்லர்

••• ••• •••

**"பொறுப்புள்ளவர்கள் அமைதியாக பணிபுரிவார்கள். பொறுப்பற்ற வீணர்கள் ஆடம்பரமாக வீண் கூச்சல் போட்டுத் திரிவார்கள்"**

– ஈசாப்

## எது விலை உயர்ந்தது....?



ஒரு ஆறு வயது சிறுவன் தன் நான்கு வயது தங்கையை அழைத்துக்கொண்டு கடைத் தெருவின் வழியாகச் சென்றுகொண்டிருந்தான். ஒரு கடை வாசலில் இருந்த பொம்மையைப் பார்த்துத் தயங்கி நின்ற தங்கையின் கைகளில் அந்த பொம்மையை எடுத்து கொடுத்துவிட்டு ஒரு பெரிய மனிதனின் தோரணையில் கடை முதலாளியை பார்த்து, "இந்த பொம்மை என்ன விலை...?" என்று கேட்டான். அதற்கு சிரித்துக்கொண்டே அந்த முதலாளி "உன்னிடம் எவ்வளவு இருக்கிறது...?" என்று கேட்டார். அதற்கு சிறுவன் தான் விளையாட சேர்த்துவைத்திருந்த கடல் சிப்பிகளைத் தன் காற்சட்டைப் பையில் இருந்து எடுத்துக் கொடுத்து, "இது போதுமா...?" என்று கவலையோடு கேட்டான். "அவன் வாடிய முகத்தைக் கண்ட முதலாளி, "எனக்கு நான்கு சிப்பிகள் போதும்..." என்று கூறி மீதியைக் கொடுத்தார். சிறுவன் மகிழ்ச்சியுடன் பொம்மையோடு தங்கையை அழைத்துக்கொண்டு வீட்டிற்குச் சென்றான். இதையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த அந்தக் கடையின் வெலையாள் முதலாளியிடம், "அய்யா ஒன்றுக்கும் உதவாத இந்த சிப்பிகளை வாங்கிக்கொன்று விலை கூடிய அந்த பொம்மையைக் கொடுத்து விட்டீர்களே...!" என்றான். அதற்கு முதலாளி, "சிறுவனுக்கு பணம் கொடுத்தால்தான் பொம்மை கிடைக்கும் என்பது தெரியாத வயது. அவனைப் பொறுத்தமட்டில் அந்த சிப்பிகள் தான் உயர்ந்தவை. நாம் பணம் கேட்டால் அவன் மனதில் பணம்தான் உயர்ந்தது என்ற எண்ணம் வந்துவிடும். அதைத் தடுத்துவிட்டேன். மேலும் தன் தங்கை கேட்பவற்றைத் தன்னால் வாங்கித்தர முடியும் என்ற தன்னம்பிக்கையை அவனுள் விதைத்து விட்டேன். என்றோ ஒருநாள் அவன் பெரியவனானதும் இந்த சம்பவங்களை நினைத்துப் பார்க்கையில், 'இந்த உலகம் நல்லவர்களால் ஆனது என்ற நல்ல எண்ணம் அவன் மனதில் தோன்றும் . ஆகையால் அவன் எல்லோரிடமும் அன்பு காட்ட தொடங்குவான்..." என்றார்.

**உலகம் அன்பினால் கட்டமைக்கப்பட வேண்டும்.**



# ஒரு வெண்மணற் கிராமம்

## காத்துக்கொண்டிருக்கிறது






வ.அ. இராசரத்தினம்

**அத்தியாயம் 8**

“கோணேசர் தாயினும் நல்ல தலைவராகத் திருகோணமலைப் பட்டினத்திற்தான் குடியிருந்தார்.

அவர் எப்போது தொடக்கம் அங்கிருக்கிறார் என்பது சரித்திர ஆசிரியர்களுக்கே சரியாகத் தெரியாதாம். குளக்கோட்டு மன்னன் அவருக்கு கோயில் கட்டி கந்தளாய்க் குளத்தையும் அதனருகே வயல்களையும் ஏற்படுத்தினானாம். இப்படி பழம் பெருமையுடனும், செல்வச் செழிப்புடனும் இருந்த கோணேசர் கோயிலை 1624ஆம் ஆண்டு கொன்ஸ்ரன்ரின் டிசா என்ற போர்த்துக்கீசத் தளபதி இடித்துத் தரைமட்டமாக்கி கோயிற்கற்களைக் கொண்டு கோட்டை கட்டினானாம்.

ஆனால் அவன் கோயிலை இடித்தபோது அவனது பக்தர்கள் கோயிலிலிருந்து மூல விக்கிரங்களைத் தூக்கிக் கொண்டு காட்டுக்குள் ஓடி ஒளித்தார்களாம். அப்படி ஒளித்தவர்கள் தாங்கள் கொண்டு வந்த விக்கிரகங்களைக் கோயிலுக்குப் பொருத்தமான இடம் எனத் தாங்கள் தேர்ந்தெடுத்த இடத்தில் வைத்துச் சின்னஞ்சிறிய கோயிலைக் கட்டி வழிபட்டார்களாம். கடலோரத்துக் குன்றிலே இருப்பதைவிட மருத நிலத்து மத்தியிலே இருப்பதைத்தான் கோணேசரும் விரும்பினார் போலும், அதனாற்றான் மூன்று நூற்றாண்டுகளில் இலங்கையிலேயே ஒரு மகத்தான இராஜகோபுரத்தை யும் தனக்கு அமைத்துக் கொண்டு தான் தன் பரிவாரங்களோடு தம்பலகாமத்தில் வாழ்கிறார். இடம் பெயர்ந்து வந்தாலும் ஆதிகோணே நாயகராகத்தான் அங்கே மிளிர்கிறார்! வருடாவருடம் ஆனி உத்தரத்தில் அவருக்குத் திருவிழா நடக்கும். அந்தத் திருவிழாக்களைத்தான் அறிவறிந்த காலத்திலிருந்து தவறிவிடவில்லை. கச்சான் காற்று சீறியடித்து, ஆலங்கேணியைச் சூழவுள்ள உப்பங் கழிகளில் எல்லாம் நீர் வற்றி உப்புப் பொரிந்து கிடக்கும் அந்தக் தரவையைத் தாண்டி கெண்டைக் காலளவு நீரோடும் உப்பு நீரோடையைத் தாண்டிச் “சமாவச்ச தீவில்” ஏறினால் அதன் பின்னர் ஒரேவெளி. இடக்கை பக்கமாக கிண்ணியாக் குடாக்கடலின் அருகாமையிற் சடைத்து வளர்ந்திருக்கும் நீர் முள்ளிச் செடிகளின் மேலே கண்டல் மரங்கள். வலக்கை பக்கமாக ஒரே வெளி, வெளி..

அந்த நெடுங்கரச்சை வெளியில் மாலை மயங்கிக் கொண்டு வருகையில் திருவிழாவிற்குச் செல்லும் ஆலங்கேணி வண்டிகளின் சவாரி முன்னே செல்லும் வண்டியைப் பக்கமாக வந்து முந்திச் செல்கையில் வண்டிக்குள்ளிருக்கும் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும்தான் எத்தனை மகிழ்ச்சி. இந்த வண்டிச் சவாரிக்காகவே தம் காளை மாடுகளைப் போஷித்து வளர்ப்போர் சிலர்.

மாட்டு வண்டிகளை முந்திக்கொண்டு முகத்திலடிக்கும் சோழகக் காற்றை எதிர்த்துச் செல்லும் இளைஞர்களின் துவிச்சக்கர வண்டிகளின் மணிச் சப்தம் வண்டிக் காளைகளின் கழுத்து மணிகளின் சப்தத்திற்குப் போட்டியாகக் கேட்டுக் கொண்டிருக்கும். முள்ளியடிப் பாலத்தை அடைந்து விட்டால் அதன் பின் தம்பலகாமந்தான்.

அங்கிருந்து பார்த்தால் நடுப் பிரப்பந்திடலின் தென்னை மரங்கள் தெரியும். இப்படியாகத் திருவிழா தொடங்க முன்னமே கோயிலடிக்குப் போய் விடுபவர்கள், கோயிலைச் சுற்றிச் சுவாமி வலம் வந்து முடியும் அதிகாலையிலேயே மீண்டும் ஆலங்கேணிக்குத் திரும்பி விடுவார்கள். பதின் மூன்றாம் திருவிழாவரையும் இது நடக்கும்.

பதினான்காம் திருவிழா ஆலங்கேணி மக்களின் உறவினர்களான தம்பலகாமத்துப் பெரிய புள்ளிகளின் உபயம்! அந்தத் திருவிழாவுக்கு ஆலங்கேணியிலிருந்து செல்லும் வண்டிகள் அதிகமாக ஒன்றும் திரும்பி வரா. தங்கள் உறவினர்களின் வீடுகளில் தங்கியிருந்து பதினெட்டாந் திருவிழாவையும் பன்றி வேட்டையையும் முடித்துக் கொண்டுதான் ஊருக்கு மீள்வர். ஆலங்கேணி மக்கள் மட்டுமல்ல, நான்கு துறைகளைக் கடந்து கட்டைபறிச்சானிலிருந்து வந்த மக்களும் தங்கள் வண்டி மாடுகளோடும், சைக்கிள்களோடும் தங்கி விடுவர். நடுப்பிரப்பந்திடலிலும், நாயன்மார் திடலிலும், வர்ணமேட்டுத்திடலிலும், கரைச்சைத் திடலிலும் அதிகமாக எல்லாரது வீடுகளிலும் ஆலங்கேணியிலும் கட்டைபறிச்சானிலுமிருந்து வந்தவர்கள் விருந்தினராக இருப்பர். அவர்களுக்கெல்லாம் அங்கு ராஜோபசாரமான விருந்து!

சென்ற ஆண்டு யாழ்ப்பாணத்திலே இருந்து வந்தவன் கரைச்சைத் திடலிலே ஒரு வீட்டின் விருந்தினனாக இருந்தான்.

திருவிழா முடிந்து வந்து நித்திரை செய்தவன் காலை எட்டு மணிக்கு மேல் எழுந்து குளித்து விட்டு கரைச்சைத்திடலூடாகச் செல்லும் வீதியிலிருந்து மேற்கே தெரியும் கோயில் கோபுரத்தைப் பார்த்தான்.

எதிரேயிருந்த வயல்களில் வரம்பு நிறைந்த தண்ணீருக்கு மேலே பச்சை பசேலென்ற நெற்பயிர்கள். அவை குலை குலையாய்க் காய்த்துப் பால் முற்றி அன்னம் வாங்கி தலை சாய்த்து வெறிகாரனைப் போல கச்சான் காற்றில் தள்ளாடிக் கொண்டிருந்தன. அந்தப் பசுங்கதிர்களுக்கு மேலாகக் கோயிற் குடியிருப்புத் திடலில் தங்கள் உச்சந் தலைகளை கச்சான் காற்று அடிக்கச் 'சாமியாடி'க் கொண்டிருக்கும் தென்னை மரங்கள். தென்னை மரங்களுக்கு மேலாக ஆதிகோணை நாயகரின் கோபுரமும் கலசமும் கம்பீரமாக தோற்றமளித்துக் கொண்டிருந்தது.

சோறுடைய சோழவள நாட்டின் தலைநகரான தஞ்சாவூரையும் அதன் பொன் கொழிக்கும் வயல்களின் நடுவே சோழ மாமன்னன் ராஜராஜன் கட்டிய பெருவுடையார் கோயில் என்ற பிரகதீஸ்வரர் ஆலயத்தையும் அதன் நிழல் சாயாக் கோபுரத்தையும் தாமோதரம் திரைப்படங்களில்தான் பார்த்திருக்கிறான். அந்த பிரகதீஸ்வரர் ஆலயத்தின் மறுபதிப்பா இந்த ஆதிகோணை நாயகர் கோயில்? அந்தச் சோறுடைய சோழவள நாட்டின் ஒரு பகுதியா இந்தத் தம்பலகாமப் பிரதேசம்?

பார்க்கும் இடமெல்லாம் பங்கப்பழனம் அப்பழனங்களின் நடுவே அமைந்துள்ள தீவுத் திடல்களில் எல்லாம் குலை குலையாய்க் காய்த்துத் தொங்கும் தென்னை மரங்களின் நடுவே ஓட்டுக் கூரை வேய்ந்த கல் வீடுகள். அவ்வீடுகளின் முன்னால் கற்றூண்களின் மேல் முதிரப்பலகைகளால் அமைக்கப்பட்ட நெற்பட்டறைகள். அவ் வீடுகளுக் குள்ளே வந்த விருந்தினர்களை வளமாக உபசரிக்கும் இனிய அவர்களுக்குக் குற்றேவல் செய்யும் அயற் கிராமத்தவர்கள்!

ஐம்பத்தெட்டாம் ஆண்டுப் பெருவெள்ளத் தின்போது அவன் தந்தையார் பேராசைப்பட்டு கண்டற் காட்டிலே முப்பது ஏக்கர் வேளாண்மை விதைத்திருந்தார். ஆனாற் குடலைப் பருவத்தில் வெள்ளம் பெருகி அந்தக் கண்டக்காட்டு மானாவாரி வெளி முழுவதையுமே அழித்து விட்டது. அடுத்த

வருடம் அவருக்கு விதை நெல்லும் இல்லை. காவுதடி இல்லாவிட்டாற் சோறே இல்லை என்ற நிலை!

ஆனால் வெள்ளம் வடிந்த பின்னர் தம்பல காமத்தில் கோடைப்போகம் அமோகமாக விளைந் தது. எல்லாப் பட்டறைகளிலும் நெல் ஏறிக் கொண் டது. அந்த வருடம் ஆவணி மாதத்தில் அவன் விடுதலையில் இருந்தபோது தந்தையார் வண்டி கட்டிக்கொண்டு தம்பலகாமம் வந்திருந்தார். சின்னையா அம்மாச்சியின் பட்டறையில் இருந்து இரண்டு அவணம் விதைநெல் அளந்து கொண்டார்.

ஆனால் விருந்தினரை உபசரிப்பது என்பது ஒரு விடயம். கொடுக்கல் வாங்கல் வேறு விடயம் என்ற கொள்கை தம்பலகாமத்தில் எல்லாரிடமுமே உண்டு. சின்னையா அம்மாச்சி தயாராக அச்சடித்து வைத்திருந்த புறோ நோட்டில் மூன்று அவணம் நெல்லின் தற்போதைய பெறுமதியை காசாகக் கொடுத்ததாக எழுதிக் கொண்டார், கண்டக்காட்டு வெளி விளைந்ததும் மூன்று அவணம் நெல்லைக் கொண்டு வந்து கொடுத்தால் புறோ நோட்டைக் கொடுத்து விடுவார். மானாவாரிக் காணிக்காரர்களுக்கு அவர் கடன் கொடுப்பதில்லையாம். ஆனாலும் அப்பாவுக்கு கொடுத்து விட்டார்.

தம்பலகாமம் இத்தனை செழிப்பிலும் செல்வத்திலும் கொழித்தாலும் இன்னமும் தன் பழமையை விட்டுக் கொடுக்காமறந்தானிருந்தது. இங்கே சிகை அலங்கரிக்கும் பரமனோடு பழகு வதைப் போலத் தம்பலகாமத்தில் முடியுமா? “எங்களைப் போல உயர்ந்த சாதிவேளாளர் இந்த இலங்கைச் சிலோனிலே கிடையாது” என்று கூட்டாம் புலியிலும் கள்ளிமேட்டிலும் வசிப்போர் பெருமை பேசிக் கொள்கின்றனர்.

“நாங்கள் சாதாரண கரையாரல்ல மச்சகந்தி யைப் பரிமளகாந்தியாக்கிய குருகுலத்துச் சத்திரி யர்கள்” என்று மகாபாரதப் பெருமை பேசிக் கொள்கிறார்கள் மற்ற மேடுகளில் உள்ளவர்கள்.

இந்த இருசாராரும் குறைந்த சாதிக்காரர் என்று சிலரைச் சிப்பித்திடலிலே ஒதுக்கி வைத்தி ருக்கிறார்கள். அந்தக் குறைந்த சாதிக்காரர்களுக்குச் செம்பிலே தண்ணீர் கூடக் கொடுக்க மாட்டார்கள். கோயிற் பிரகாரத்தில் அங்கப்பிரதட்சணம் செய்யக் கூடவிடமாட்டார்கள்!

ஆனால் நல்ல காலமாக, அந்தச் சோறுடைய சோழ நாட்டைப் போல் இந்தக் கிராமத்தில் அக்ரஹாரமும் பிராமணர்களும் இல்லை. இருந்தால் குருகுலம் என்றும் வேளாளர் என்றும் பெருமை பேசுபவர்களையும், மற்றவர்களையும் சூத்திரர் என முத்திரை குத்தி ஒதுக்கியிருப்பார்கள்!

அங்கேயுள்ளவர்களை எல்லாம் ஒரே குலமாகக் கருதலாம்போல இருந்தது தாமோதரத் திற்கு. அவர்கள் எல்லாருமே விவசாயிகள். ‘கார் காக்காத விவசாயிகள்’ என்ற புதிய சாதியினராக அவர்களைக் குறிப்பிடலாம். அவர்கள்தான் மழையை நம்பி இருப்பதில்லையே. அவர்களுக்காக குளக் கோட்டன் கந்தளாய்க் குளத்தைக் கட்டி வைத்திருக் கிறானே! பங்குனிப் புழுக்கத்தையும் நுளம்புக் கடியையும் பொருட்படுத்தாமல் நினைவு களிற் தோய்ந்து கொண்டிருந்த தாமோதரம் நடுச்சாமமான போதுதான் நித்திரையானான்.


– தொடரும்....

## குழந்தை வளர்ப்பு


**PARENTING ...**



பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை "தகுதியற்றவர்கள்" அல்லது "ஒன்றுக்கும் உதவாதவர்கள்" போன்ற பெயர்களை கொண்டு அழைப்பதை மிக இயல்பானதாகக் கருது கின்றனர். மேலும் சில பெற்றோருக்கு இது ஒரு பெரிய விஷயமாகவே தோன்றாது. ஆனால் இது போன்ற செயல் அவமரியாதைக்குரியதாக கருதப்படுகிறது. சில பொருத்தமற்ற சொற்களில் உங்கள் குழந்தையை நீங்கள் திட்டும்போது, அது அவர்களில் விரும்பத் தகாத எண்ணங்களை தோற்றுவிக்கும். அவர்களின் சுயமரியாதை பாதிக்கப்படுவதோடு, கவனிப்பிற்காக பெற்றோரை நம்புவதில் குழந்தைகளுக்கு இருக்கும் நம்பிக்கை குறைகிறது.



**ஆசிரியர்:** உன்னைக் கூப்பிட்டேனே, காதில் விழவில்லையா?
**மாணவன்:** நான்காவது தடவை கூப்பிட்ட போதுதான் காதில் விழுந்தது சார்....



**ஆசிரியர்:** என்ன ராமு! நீ கடவுளை வணங்கிவிட்டுத்தான் சாப்பிடுவியா...?
**மாணவன்:** இல்ல சேர், எங்கம்மா நல்லாவே சமைப்பாங்க....



# ஆயித்தியமலை நாயகியே அம்மா

டெனிஸ்டன் - சொறிக்கல்முனை

மீன்பாடும் நகர தேன் சுரக்கும்
திரவிய ஊர் ஆயித்திய மலை உறைந்த
அற்புதமே எங்கள் அதிசயமே
பணிந்தோம் யாம் உன் பொற்பதமே
வேண்டி வரும் பக்தரெல்லாம்
விடியல் காண செய்யும்
கோடி அருள் இராக்கினியே
குவிந்த நல் நவ ரத்தினமே!

களனி சூழ கொண்டவள் நீ
அம்மா தரணி ஆள வந்தவள் நீ
தாயென்றுனை அழைக்கும் சேய்கள்
எம் நோய் நொடி தீர்த்தருள்வாய்
நோவு தரும் துன்பங்களின்று காத்தருள்வாய்

சதா சுரக்கும் சகாயமே அம்மா
சாவாதெம்மை வாழ்விக்கும்
உன் சந்நிதானமே அம்மா
உம் படத்ததனை ஏறெடுத்தால்
பரம பாசம் கண்ணில் தெரியுதம்மா
உனை ஒரு நொடி பார்த்தழுதால்
ஓராயிரம் விலங்கொடிந்த ஆனந்தம் பிறக்குதம்மா

கால் நோக நடந்து வந்தமர்ந்தால் உன் பதி
எமக்கு உன் மடி போல தெரியுதம்மா
அம்மடியில் நின்மதியாய் ஒரு உறக்கம் வருகுதம்மா
வருடத்தொரு முறையேனும் உனை பார்க்காவிடில்
பாவி பெரும் இழப்பொன்றை
எதிர்கொண்டதாய் தோன்றுதம்மா.
உனை தேடி வரும் வேளையதோ
தாயை காணவரும் சேயை போல்
பெரு மகிழ்வு ஊறுதம்மா

சதாசகாய தாயே அம்மா
எங்கள் தஞ்சமே நீயே அம்மா
கருணையின் காருண்ய ஊற்றே
கண்டு நீர் எம் துயரதை ஆற்றுமம்மா
வேந்தனை பிரசவித்த கருணை வள்ளலே
விடியலொன்றை பிரசவித்து எம்
தேச விலகாத்துயர் நீக்கும் அம்மா
சதா சகாய தாயே எம் மேல்
உம் கருணை மழை பொழிவாயே!

## வீட்டுக்குறிப்புகள் தெரிந்துகொள்வோம்

மிக்சியில் சட்னி மசாலா போன்றவற்றை அரைத்து எடுத்ததும் மீண்டும் மிக்சி ஜாரில் தண்ணீர் விட்டு ஓட விடவும். அப்போது அதனுள் கெட்டியாக ஒட்டிக்கொண்டிருக்கும் சட்னி, மசாலா போன்றவை தண்ணீரோடு கரைந்து வந்துவிடுவதால் ஜாரை சுத்தம் செய்வது மிகவும் சுலபமாகும்.



Pressure Cooker Gasket

பிரசர் குக்கரின் காஸ்கட் தொள தொளவென்றாகிவிட்டால் புதிது வாங்கும்வரை இதனை குளிர்சாதனப் பெட்டியில் வைத்து பின் எடுத்துப் பயன்படுத்தினால் நான்கைந்து நாட்கள் பயன்படும்.

# எதிர்மறைச் சூழலிலும் நேர்மையாய் இருப்போம்



ஜே. எச். இரத்தினராஜா

எதிர்மறைச் சூழலை மிக நுட்பமாய் முறியடிக்கும் வழி நாம் நேர் மறையாய் (positive) நடந்து கொள்வதுதான். எல்லா நேரங்களிலும் நம்முடைய சூழல் நாம் விரும்புவதுபோல் அமைந்து விடுவதில்லை. பல நேரங்களில் எதிர்பாராமலே நாம் எதிர்மறைச்சூழலில் சிக்கிக் கொள்கிறோம். நம்மைப்பற்றி பிறர் மாறுபாடாக பேசும்போதும், நியாயமான தேவைகளுக்கும் மறுப்புக்களைச் சந்திக்கும்போதும், நடந்துவிடும் என்று எதிர்பார்த்துக் காத்திருக்கும் நேரத்தில் ஏமாற்றம் ஏற்படும்போதும், அவசரமான நேரத்தில் அவசியமில்லாமல் நம் நேரத்தை பிறர் வீணடிக் கும்போதும், நாம் காரணமாயில்லாத நிலையில் நம்மீது குற்றமோ பழியோ சுமத்தப்படும்போதும், நம்முடைய உழைப்பும், ஆற்றலும், பணமும், நேரமும் மற்றவர்களால் அல்லது புறச்சூழலால் விரயமாகும்போதும், அநியாயங்களைக் கண்டும் வாய்மூடி மௌனியாய்ச் செல்ல நேரிடும்போதும் என இன்னும் பல்வேறு நேரங்களில் நாம் எதிர்மறையான சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இயல்பாய் இருப்பதென்பதும், இயல்புநிலை மாறாமல் நடந்துகொள்வதென்பதும் கடினமானதுதான்.

ஒவ்வொரு சூழலுக்கும் முடியும் என்றால் அதேயளவு எதிர்வினை காட்டக்கூடியவர் களாகத்தான் பெரும்பாலானவர்கள் இருக்கி றார்கள். ஆனால் எதிர்மறைச் சூழலில் நாமும் எதிர்மறையாகவே நடந்து கொண்டால் நிலைமை இன்னும் மோசமாவதோடு சம்பந்தப்பட்டவர்கள் நம்மோடு பகையாகி விடுவதற்கான வாய்ப்பும், நம்மிடமோ, நமக்குச் செய்யவேண்டிய பணிக ளிலோ மேலும் மோசமாய் நடந்து கொள்ளவும் நேரிடலாம். எதிர்மறையாய் நாம் நடந்துகொண்ட நாள் முழுவதுமே சினத்தாலும், அதிருப்தியாலும் நிரம்பி நாம் துன்புற வேண்டியுள்ளவர்களாகி விடுவோம்.

பின்பற்றுவதற்குச் சற்று கடினம்தான், என்றா லும் எதிர்மறைச் சூழல்களிலும் நாம் நிலை மாறாமல் இருப்பது பெரிதும் அவசியமானதாகும். குறைந்த பட்சம் கோபம், வெறுப்பு, அலட்சியம் போன்றவற்றை வெளிப்படுத்தாமல், தேவைப் படும் நிலையில் வருத்தத்தை வெளிப்படுத்தி, நம் கருத்தைத் தெரிவிக்கலாம். எதிர்மறைச் சூழலை மிக நுட்பமாய் முறியடிக்கும் வழி நாம் நேர் மறையாய் நடந்து கொள்வதுதான்.

நேர் மறையாய் நடந்து கொள்ளும் வழி முறைகளைப் பார்ப்போம்.

அமைதியிழந்து காணப்படும் நேரத்தில் பதிலளிப்பதைத் தவிர்க்கலாம். நாம் ஏதோ கவனத்தில் இருக்கிறோம் என்பதை மென்மை யாய் தெரிவிக்கலாம்.

குரலை உயர்த்திப் பேசுபவர்களிடம் நாம் அதே தொனியில் பேச வேண்டுமென்பதில்லை. அப்படிப் பேசினால் நிலைமை விபரீதமாகு மேயன்றி, இரு சாரார்க்கும் நன்மை ஏற்படாது. நிலைமையை கட்டுக்குள் கொண்டுவர நாம் மென்மையான குரலில் பேசுவதே உகந்ததாகும். எதிர்தரப்பார் ஆவேசப்படும்போது, நான் மட்டும் ஏன் அடங்கிப்பேச வேண்டும்? என்ற கேள்வி நம் மனதில் எழக்கூடும். இது அடங்கிப் போவ தல்ல: நிலைமையை அடக்குவதாகும்.

பிரச்சினைகள் தீர்ந்தபின் யோசித்துப் பார்த்தால் நாம்தான் உணர்வாக, கண்ணியமாக நடந்து கொண்டோம் எனும்போது பாராட்டும், பெருமிதமும் கிடைப்பதை உணரலாம். பாராட் டிற்காகவோ, பெருமிதத்திற்காகவோ இல்லை யென்றாலும், கடைப்பிடிக்க வேண்டிய சிறந்த அணுகுமுறை மென்மைதான்.

எதிர்மறைச் சூழலில் நமக்குப் பலரும் ஆலோசனைகள் சொல்வார்கள். "எனக்குத்

தெரியாததையா சொல்லிவிட்டார்கள்" என்று முற்றிலும் புறந்தள்ளி விடாமல் நாம் இயல்பாய் இருக்கவும், நேர்மறையாய் செயல்படவும் எது சிறந்த ஆலோசனையோ அதனை ஏற்றுக் கொள்ளலாம்.

சில நேரங்களில் நம் குழப்பத்தை அதிகரிப்பது போல் ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைக் கூறுவார்கள். சூழலின் கடுமையை அதிகரிப்பதுபோல யார் பேசினாலும், அவரை மதிக்க வேண்டிய நிலையிலிருப்பதைப் பற்றி கவலைப்படாமல் தவிர்த்து விடலாம்.

மற்றவர்களின் கருத்துக்களில், செயல்பாடு, நடத்தைகளில் நமக்கு உடன்பாடில்லை என்றாலும், அவைகளுக்காக அவர்களை உள்ளுக்குள் நாம் வெறுப்பதாயிருந்தாலும், எதிரில் எதனையும் வெளிப்படுத்துதல் கூடாது. அதற்கும் மேலாக அவர்களிடமும் இயல்பாகவே நடந்து கொள்ளுதல் நல்லது.

நம்முடைய எதிர்மறையான சிந்தனைகளோ, செயல்பாடுகளோ மற்றவரைக் காட்டிலும் நமக்குத்தான் அதிகமான பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை நினைவில் நிறுத்துதல் அவசியம். "ஒவ்வொரு இடர்பாட்டிலும் ஒரு வாய்ப்பு மறைந்துள்ளது" என்று ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் கூறுகிறார். எதிர்மறைச் சூழலிலும் நமக்கான வாய்ப்பு எதுவெனப் பார்க்கலாம்.

நம்மால்தான் தவறு நிகழ்ந்தது எனும்போது நேர்மையாய் அதனை ஒப்புக்கொள்ளுதல் வேண்டும். அறிந்தோ அறியாமலோ நாம் தவறு செய்துவிடும்போது மனத்தளர்ச்சி அடைய வேண்டியதில்லை. "வாழ்வில் தவறுகள் செய்வதால் கழியும் நேரமாவது ஏதும் செய்யாமல் சும்மாவே கழித்த நேரத்தைவிட மதிப்பு வாய்ந்தது" என்று ஜார்ஜ் பெர்னாட்ஷா கூறுகிறார் (எல்லாத் தவறுகளும் இதில் அடங்கி விடாது என்பதில் கவனம் இருக்கட்டும்). எதற்காக பெர்னாட்ஷா அப்படிச் சொல்கிறார்? தவறு நேரும்போதுதான் சரி எது என்பதில் தெளிவு பிறக்கிறது, அனுபவங்கள் கிடைக்கின்றன. அனுபவங்கள்தான் நம்மைச் சரியாக வழிநடத்துகின்றன.

எதிர்மறைச் சூழலில் நாமிருக்கும்போது, நம்முடைய நலம் விரும்பும் நண்பர்களை அழைத்து நம் எண்ணங்களை பகிர்ந்து கொள்ளலாம். சரியான ஆலோசனைகளைக் கேட்கலாம். நமக்குப் பிடித்த நல்ல இசையைக் கேட்கலாம். நமக்குப் பிடித்த புத்தகங்களை எடுத்துப் புரட்டிப் பார்க்கலாம்.

ஆழ்ந்து மூச்சு விடுதல், கண்களை மூடியபடி சிறிது நேரம் அமைதியைக் கடைப்பிடித்தல். தியானம் பழக்கமுள்ளவர்கள் சிறிது நேரம் தியானம் செய்தல். குளிர்ந்த நீரைப் பருகுதல் போன்றவை நம்மை உடல், மன ரீதியாக ஆசுவாசப்படுத்தும்.

நாம் எல்லோரையும் எல்லா நேரத்திலும் திருப்தியுறச் செய்ய இயலாது. நாம் என்பதில்லை, யாராலுமே அது முடியாது. எனவே, சில சமயங்களில் வேண்டிய மனிதர்களையோ, பொருள் பணத்தையோ, ஏன் நட்பையோ கூட இழக்க வேண்டி வரலாம். அதற்காக இடிந்துபோய் விடுவதோ, வாட்டமாகவே காணப்படுவதோ தவிர்க்கப்பட வேண்டும்.

சில இழப்புகள் பெரும் நிம்மதியைக்கூட கொண்டு வந்து சேர்க்கலாம். எப்போதும் நமக்கு இன்னலை ஏற்படுத்துபவர்கள் என்னதான் தேவைப் படுபவர்களாக இருந்தாலும், அவர்களை இழப்பதற்கு நாம் நம்மைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்குப் பின்னர் நேர்மறையான மனிதர்களை நோக்கி நம்முடைய கவனத்தை திசை திருப்பலாம்..

இன்பமும் துன்பமும் கலந்துதான் வாழ்க்கை என்பது. இது எல்லோரும் அறிந்திருப்பதுதான். இன்பத்தை மகிழ்வோடு கொண்டாடுகின்ற நாம் துன்பத்தைக் கொண்டாட இயலாது. ஆனால், எப்படிப்பட்ட சிக்கலான சூழ்நிலைகளையும் எதிர்கொள்கின்ற பக்குவம் பெற்று விட்டோமெனில் துன்பம் என்பது ஏது? பக்குவப்படுவோமா! ●

---

மெழுகுவர்த்திகளை குளிர்சாதனப் பெட்டியில் வைத்து தேவைப்படும்போது உபயோகப்படுத்தினால் விரைவில் உருகாமல் அதிக நேரம் நின்று எரியும்.

**வீட்டுக் குறிப்புகள்**



தேங்காயை குளிர்சாதனப்பெட்டியில் வைத்து ஜில்லென்று இருக்கும்பொது எடுத்து உடைத்தால் சுலபமாக உடைத்துவிடலாம்.

நைலோன் கயிரை வாங்கியவுடன் சோப்பு நீரில் நனைத்து உபயோகித்தால் நீண்ட நாட்கள் உழைக்கும்.



# அரசியல் ஆடும் பொம்மைகள்

- குடிமகன் -

இலங்கையில் அரசியல் கள நிலைவரம் இலங்கையின் கையில் இல்லை என்பது உறுதியாகத் தெரியவருகிறது. ஒவ்வொரு வல்லரசு நாடுகளும் இலங்கையின் சேணத்தை தங்கள் தங்கள் கையில் பிடித்துக்கொண்டிருப்பது போல்தான் தெரிகின்றது. இலங்கையில் அரசியல்வாதிகளும் நூலில் ஆட்டுவிக்கப்படும் பொம்மைகள்போல் வெளிநாட்டுச் சக்திகளின் ஆட்டத்திற்கு ஆடுகின்றார்கள் என்று சாதாரண பாமர மக்களிற்கும் விளங்குகின்றது.

சீனாவின் உரக்கப்பலிற்கான, அர்த்தமற்ற கொடுப்னவுபற்றி கணக்காய்வு திணைக்களம் ஆராய்ந்து, பொறுப்பானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி அறிக்கை சமர்ப்பித்துள்ளது. நடவடிக்கை எடுக்கவேண்டியவர்கள் விலங்கு மாட்டியவர்கள்போல் செயற்படுகின்றார்கள். வழங்கப்பட்ட அத்தனை மில்லியன் டொலர்களும் எங்கள் காசுதானே! அப்போதைய விவசாய அமைச்சர் "அதற்கும் தனக்கும் சம்பந்தம் இல்லாதவர் போல்" அறிக்கை விடுகின்றார். பாவம் பொதுமக்கள்! அவர்களின் கைகளில் ஐந்து வருடத்திற்கு ஒருமுறைதான் அதிகாரம் வருகின்றது: அதுவும் ஊழல்வாதிகள், கையூட்டுப் பூதங்கள் என்போரின் ஊடறுப்புகளால் தடம் மாறிவிடுகின்றது.

நேர்மையானவர்கள் என்று நாம் நம்பும் புதுமுக அரசியல்வாதிகளும் அப்படியே மாறி அரசியல் சாக்கடைக்குள் வீழ்ந்து மாறிப்போய் நாறிப்போகின்றார்கள். இதற்குத்தான் "சிஸ்டம் சேஞ்ச்" வேண்டும் என்று இளைஞர் கூட்டம் ஒன்று அறைகூவல் விடுத்து நிற்கின்றது; அப்படிக் கேட்டவர்கள் கூட ஒவ்வொன்றாக கூட்டுக்குள் அனுப்பப்படுகின்றார்கள்.

சில தசாப்தங்களுக்கு முன் தமிழ் இளைஞர்கள் பட்ட அவஸ்தைகளையே தற்போது பெரும்பான்மையின இளைஞர்களும் படுகின்றார்கள். ஆனால் அன்று பெரும்பான்மையின ஊடகங்கள் அச்சிறுபான்மையின இளைஞர்களை பயங்கரவாதிகளாகக் காட்டியிருந்தன. அதன்பின்னர்தான் ஆயுதக் கலாச்சாரம் தலைதூக்கியிருந்தது. இப்போது விதைத்தது அறுக்கப்படுகிறது. முன்பு சிறுபான்மையின இளம் வாலிபர்கள் கைது செய்யப்படும்போது 'பயங்கரவாதிகள்' கைது செய்யப்பட்டுள்ளதாக பேரினவாத ஊடகங்கள் செய்திகளை 'கொட்டை எழுத்துகளில்' செய்திகளாக வெளியிட்டன; ஆனால் அதே இளைஞர்கள் 'நிரபராதிகள்' என்று விடுதலை செய்யப்படும்போது இரண்டு வரிச் செய்திகளாகக் கூட அவற்றை வெளியிடுவதில்லை. இதனால் பெரும்பான்மையின மக்களின் மனதில் சிறுபான்மை மக்களைப் பற்றி தவறான பதிவுகளே பதிவிடப்பட்டன. எப்போது மதவாதம், இனவாதம் இலங்கையில் தூர்ந்துபோகின்றதோ அன்றுதான் நாடு துளிர்க்கும். அதற்குத்தான் விடுகிறார்களில்லையே! ■

**"தனக்கொன்றும் தெரியாவிட்டாலும் எல்லாமறிந்தவன்போல நடிப்பவன்தான் அரசியல்வாதி"** – பெர்னாட்ஷா

••• ••• •••

**"வீட்டுக்கு வந்த விருந்தாளிகளை உபசரித்து அன்னம் அளிக்காத இல்லறம் தான் உணர்ச்சியற்ற மிருகத்தைவிட கேவலமானது"**
– ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர்

# சுருங்கும் சுற்றமும்

## நொறுங்கும் சொந்தமும்



சகோதரி ஸ்ரீ பொற்செல்வி

காலத்தின் கட்டளை
கண்களும் ஏங்குமே!
காலங்கள் தாண்டியே
காரணம் மாறுமே!

சுருங்கும் சுற்றமும்
நொறுங்கும் சொந்தமும்!
மறுக்க முடியுமா
மனங்களின் மாற்றத்தை!

கனவுகள் நிறைந்தே
எத்தனை இதயம்!
கணப்பொழுதிலே
தொலைந்தே போய்விட!

மலரும் நினைவைத்
தூரத்தியே நிறுத்தித்
தொலைந்த நாட்களைத்
தேடியே தவிக்குமே!


விசித்திரக் குணங்கள்
சுமந்த உள்ளங்கள்
சொற்படி இல்லையே
மனிதம் மறைந்ததே!

தப்பித்தவறி கணக்கிட
முடியாத செயல்களும்
எட்டிப்போகும்
மனங்களின் நிலையிதே!

உறவுகள் கூடியே
குதூகலித்த தினம்
உணர்வுகள் தாண்டிய
பண்பு அன்று!

இன்றைய நிலையிதே
யாரென்றே புரியாது
தடுமாறும் இளவல்களின்
பரிதாபமோ இன்று!

மனங்களின் தவிப்பும்
குணங்களின் வெறுப்பும்
பெற்றிடும் மனிதம்
சிந்திக்க மறந்ததே!



### உலகச் செய்திகள்



ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் 51வது கூட்டத் தொடர் ஜெனீவாவில் நடைபெற்று வரும் நிலையில், இனப் பிரச்னைக்கு உரிய வகையில் அரசியல் தீர்வை வழங்குவதில் இலங்கை அரசாங்கம் கொண்டிருக்கும் கடப்பாட்டை நிறைவேற்றுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை எட்டவில்லை என ஐநா சபையில் இந்தியா கவலை வெளியிட்டுள்ளது.

*- webdunia*

### வினா விடைப் போட்டி - இல 38

**சரியான விடைகள்**

1. இறுதி இராவுணவு / நற்கருணை, குருத்துவம்
2. 1) தலதிருஅவை இறைமக்களுக்கு செவிமடுக்கவும்
   2) உரையாடல்கள் வழியாக தலத்திருஅவைக்கு அவர்கள் தங்களை வெளிப்படுத்த சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுக்கவும்
   3) திருஅவை தனது ஒருங்கிய இயல்பை மீண்டும் கண்டு கொள்ளவும் வேண்டும்
3. பெவரி ஸில்ஸ்
4. இல்லை
5. புனித பிரான்சிஸ் தே சேல்ஸ்
6. தாய்மொழியும் நமது நிலையும்
7. ஆண்டவருக்கு ஊழியம் செய்தல், பணிவு, தாழ்மை, கீழ்படிதல், அடக்கம் போன்ற நற்பண்புகள்
8. தர்மம், இறைவேண்டல், நோன்பு
9. இறை ஊழியர் ஆகாஷ்
10. தி. சம்பந்தன், இலங்கையர்க்கோன், வைத்தியலிங்கம்

*சரியான விடைகள் எழுதி 500/= பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:*

- **இ. பத்மாமேரி,**
  இல. 133A, அம்மன் கோவில் வீதி,
  கல்முனை - 01.
- **பே. நோக்ஸ்ஸ்ரீமன்,**
  7ம் குறுக்கு, இருதயபுரம் மேற்கு,
  மட்டக்களப்பு.
- **ம. சில்வெஸ்ரர்,**
  திருமலை வீதி,
  மட்டக்களப்பு.

பங்குபற்றியோர் - 07 பேர்
சரியான விடை எழுதியிருந்தோர் - 07 பேர்

# கூட்டொருங்கியக்கத் திருஅவை



■ அருட்தந்தை பிறைனர் செலர்

## 1. உடன் பயணிக்கும் தோழர்கள்

திருஅவை என்பது ஒரு கும்பல் அல்ல. அது அன்பினால் வழிநடத்தப்படும் குடும்பமாகும். நம்மோடு உடன் பயணித்துக் கொண்டிருக்கும் அனைவரும் நமது குடும்ப உறுப்பினராவர்.

இணைந்து பயணிக்கும் திருஅவையாக நாம் இருக்கிறோமா என்று நம்மைச் சோதிக்கும்போது, நாம் நம்மோடிருக்கும் ஏழைகள், துன்புறுவோர், பிறசமயத்தவர் ஆகிய அனைவரையும் கணக்கில் கொண்டு பங்கில் திட்டங்களைத் தீட்டுகிறோமா, உறவை ஆழப்படுத்துவதில் அன்பியங்கள் துணை புரிந்திருக்கின்றனவா, சிரமப்படுகிறவர்களுக்கு நட்புறவுடன் பராமரிப்புத் திட்டங்கள் உருவாக்குவதில் ஆர்வம் காட்டியுள்ளோமா என்பன போன்ற பல கேள்விகளுக்கு நாம் பதில் தேட வேண்டும்.

| பதில் மொழி | 1. உடன் பயணிக்கும் தோழர்கள் |
|---|---|
| அனுபவங்களைப் பகிர்வோம் | 1. நமது திரு அவையில் (பங்கு, மறைமாவட்டம்) நம்மோடு இணைந்து பயணிப்போர் யாவர்?<br>2. நம்மால் பின்னுக்குத் தள்ளப்பட்ட அல்லது நமது பார்வையில் படாத நபர்கள் அல்லது குழுக்கள் யாவர்? (உ.ம்) செருப்புத் தொழிலாளர்கள், வறிய விதவைகள், சாலையோர நடைபாதையில் வாழ்வோர், தூய்மைப் பணியாளர்கள், மாற்றுத்திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவர், புலம் பெயர்ந்தோர், தலைச்சுமட்டுப் பெண்கள், ...<br>3. எவ்வாறு அவர்களோடு நாம் தோழமையில் வளர்வது? |
| அனுபவங்களை ஆழமாக உற்று நோக்குவோம் | 4. இந்த அமர்வின் மகிழ்ச்சியானத் தருணங்கள் எவை?<br>5. சந்தித்தத் தடைகளும் சிக்கல்களும் யாவை?<br>6. நம்மில் என்ன காயங்களை அவை வெளிப்படுத்தின?<br>7. இந்த அனுபவங்கள் தூண்டும் உள்ளுணர்வுகள் யாவை? |
| கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் | 8. தூயஆவியார் நம்மிடம் கேட்பது என்ன?<br>9. உறுதிப்படுத்த வேண்டிய கருத்துக்கள், மாற்றத்திற்கான வாய்ப்புக்கள், எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் யாவை?<br>10. திருஅவைக்கு என்ன புதிய பாதைகள் தென்படுகின்றன? |

## 2. செவிமடுத்தல்

உறவுச் சமூகமாக ஒன்றாகக் கூடும்போது ஒருவர் மற்றவர் மீது கரிசனை கொள்வது இயல்பு. அவர்களைப் பற்றி அதிகம் தெரிந்து கொள்ள விரும்புகிறோம். அதனால் அவர்களுக்குச் செவிமடுத்து அவர்கள் சொல்வதைக் கேட்க விரும்புவோம்.

செவிமடுப்பது இணைந்து பயணிப்பதன் முக்கியமானப் பண்பாகும். பெரியவர் சிறியவர்களுக்கும், திருநிலையினர் துறவியர் போன்றோர் பொதுநிலையினருக்கும் செவிமடுக்கிறோமா, காயப்பட்டு விழுந்துகிடக்கும் மனிதர்களுக்குச் செவிமடுக்கும் பண்பு நமது குழுக்களில், நமது பங்கில் உள்ளதா என்று சிந்திக்க வேண்டும். இன்றைய திருஅவை அமைப்பு செவிமடுத்தலை ஊக்கப்படுத்துகிறதா? திறந்த மனத்தோடும், முற்சார்பு எண்ணமின்றி ஒருவர் ஒருவருக்கும், அனைவரும் சேர்ந்து தூய ஆவியாருக்கும் செவிமடுப்பது நாம் தோழமையில் வளர உதவும்.

| பதில் மொழி | 2. செவிமடுத்தல் |
|---|---|
| **அனுபவங்களைப் பகிர்வோம்** | 1. யார் யாருக்கு நாம் இன்னும் அதிகமாக செவிமடுக்க வேண்டும்?<br>2. விளிம்பு நிலையில் இருப்போருக்கு எவ்வாறு செவிமடுக்கிறோம்?<br>3. பொதுநிலையினருக்கு, குறிப்பாக பெண்களுக்கு, இளைஞருக்கு, சிறியவர்களுக்கு எவ்வாறு செவிமடுக்கிறோம்?<br>4. அருள்பணிப் பேரவை உறுப்பினர்கள், நிர்வாகிகள்இறைமக்களுக்குச் செவிமடுத்து கூட்டங்களில் முடிவுகள் செய்கிறார்களா? இதில் குறைபாடுகள் இருந்தால், அவற்றை நாம் எப்படிச் சரி செய்ய முடியும்?<br>5. நாம் உளப்பூர்வமாக செவிமடுக்க உதவியாக இருப்பவை யாவை?<br>6. பிறருக்கு செவிமடுக்காதவாறு தடையாகஉள்ள முற்சார்பு எண்ணங்கள் யாவை? இவற்றை எவ்வாறு சரி செய்யலாம்? |
| **அனுபவங்களை ஆழமாக உற்று நோக்குவோம்** | 7. இந்த அமர்வின் மகிழ்ச்சியானத் தருணங்கள் எவை?<br>8. சந்தித்தத் தடைகளும் சிக்கல்களும் யாவை?<br>9. நம்மில் என்ன காயங்களை அவை வெளிப்படுத்தின?<br>10. இந்த அனுபவங்கள் தூண்டும் உள்ளுணர்வுகள் யாவை? |
| **கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள்** | 11. தூயஆவியார் நம்மிடம் கேட்பது என்ன?<br>12. உறுதிப்படுத்த வேண்டிய கருத்துக்கள், மாற்றத்திற்கான வாய்ப்புக்கள், எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் யாவை?<br>13. திருஅவைக்கு என்ன புதிய பாதைகள் தென்படுகின்றன? |

## 3. மனம் திறந்து பேசுதல்

அன்பால் வழிநடத்தப்படும் குடும்பத்தின் பண்புகளில் ஒன்று அதன் உறுப்பினர் ஒவ்வொருவரும் தமக்கு முக்கியமானதாகப்படும் அனைத்தையும் துணிவுடன் எடுத்துச் சொல்வது. இறைவனின் பிள்ளைகள் என்ற சுதந்திரத்தைப் பெற்றிருக்கும் நாம் அனைவரும் நமது மனசாட்சிக்குச் சரியென்று படுவதை எடுத்துச் சொல்ல வேண்டும். அந்தச் சூழல் நம்மிடையே உள்ளதா? நமது மரபுகளில் செய்ய வேண்டிய மாற்றங்கள் பற்றி நமக்குத் தோன்றுவதைத் துணிவுடன் எடுத்துச் சொல்லும் சுதந்திரத்தை அனுபவிக்க முடிகிறதா? பிறர் அவ்வாறு உணர்கிறார்களா? அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

| பதில் மொழி | 3. மனம் திறந்து பேசுதல் |
|---|---|
| **அனுபவங்களைப் பகிர்வோம்** | 1. நமது தலத்திரு அவையிலும், சமூகத்திலும் பொறுப்புடன் கருத்துக்களை வெளிப்படுத்த உதவியாக அல்லது தடையாக இருப்பவை யாவை? அவற்றை எவ்வாறு மாற்றலாம்?<br>2. எப்போது, எவ்வாறு நாம் முக்கியமானவற்றிற்காக (சமூக அவலங்கள், நீதி நிலைப்பாடுகள்) குரல் கொடுக்க முன்வருகிறோம்?<br>3. சமூக ஊடகங்களோடு நமக்கு உள்ள உறவு எத்தகையது?<br>4. பிரச்சினைகள் ஏற்படும் போது யார் யார் கிறித்தவ சமூகத்தின் சார்பாகப் பேசுவது?<br>5. நமது தலத்திரு அவையில் (பங்கு, மறைமாவட்டம்) மக்கள் தொடர்பு பணியாளர்கள் உள்ளனரா? அவர்கள் எவ்வாறு தேர்வு செய்யப்படுகிறார்கள்? |

- தொடரும் ....

# மறைமாவட்ட கலைச்சிற்பியொன்று ஓய்ந்தது



P.D.A.
ஜெயக்குமார்

மீன்பாடும் தேனாடு மட்டுநகர் தந்த அமிர்தகழி பதியின் பாலமீன்மடு கிராமத்தில் 1942ம் ஆண்டு உதித்து, பார்போற்ற புகழப்பட்ட இலங்கைத் திருநாட்டின்முத்துக்களுள் மாணிக்கமாய் ஜொலித்த எமது பெருமதிப்பிற்குரிய ஆசான் இருதயநாதன் சேர் அவர்கள் தனது இவ்வுலக கலைப் பயணத்தை முடித்துக்கொண்டவராக மறுவுலக வாழ்விலும் தனது கலைகளை வடிவமைக்க இயேசுவின் அழைப்பின் பேரில் சென்றுவிட்டார்.

சாதாரண ஏழ்மைக் குடும்பத்தில் பிறந்து தனது தந்தையாரின் கூத்துக்கலை, நடனக்கலை போன்றவற்றினால் ஈர்க்கப்பட்டு பல மேடை நாடகங்களையும், கூத்துக்களையும், பாடல்களையும் தானே இயற்றி, மெட்டுகள் போட்டு அரங்கேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர் தனது வாழ்க்கையின் ஆரம்பப் படியாக வாழைச்சேனை காகித ஆலையில் பணிபுரிந்து பின்னர் 35 வருடம் ஆசிரிய சேவையில் தன்னை அர்ப்பணித்து செயலாற்றி மடிந்திருக்கிறார். இவ்வேளையில் பல வரலாற்று நாயகர்களுடன் தொடர்புபட்டு மட்டக்களப்பின் கலைகளை எடுத்துக்கூறும் அளவிற்கு 'கலைக்கோட்டன்' எனும் புனைப் பெயரையும் பெற்றிருக்கிறார்.



மட்டக்களப்பு மறைமவாட்டம் தனியாக உருவாகுமுன்பே திருமலை-மட்டக்களப்பு மறைமாவட்டத்திற்கு பல கலை வளங்களை கொடுத்திருக்கிறார். அதுமட்டுமல்ல ஆயர் இல்லத்தில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் 'சமூகத் தொடர்பு நிலையத்தின்' நிர்வாகக்குழு உறுப்பினராகவும் செயற்பட்டு, கிறீஸ்தவ விழுமியங்களை எடுத்தியம்பக்கூடிய வகையில் கலைவடிவத்தின் மூலம் நற்செய்திகளை வெளிவரச் செய்துள்ளார். இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன தமிழ் சேவையில் ஒலிபரப்பப்பட்டுவரும் 'புதிய உலகம்' கிறிஸ்தவ நிகழ்ச்சியில் நாடகங்களை தயாரித்து வழங்கியுள்ளார். அத்துடன் சமூகத் தொடர்பு நிலையத்தினால் வருடந்தோறும் கொண்டாடப்பட்டுவரும் 'உலகத் தொடர்பு தின விழாக்களிலும் கூத்துகளை தயாரித்து நடித்து வருவதோடு, திரு. மலர்வேந்தன் அவர்கள் தொகுத்து வழங்க, நிகழ்வுகளுக்கு தனது பங்களிப்பை முழுமையாக வழங்கி வந்தார்.

எமது மறைமாவட்டத்தில் இயேசு சபைக் குரு அருட்தந்தை யோசப்மேரி அடிகளாரால் பிரமாண்டமான முறையில் உருவாக்கப்பட்ட "நீ எதிர்கொண்டதேன்" எனும் நாட்டிய நாடகத்தில் நடித்த பெருமையும் இவருக்குண்டு. அதுமட்டுமல்லாது, "சின்ன முத்தம்", "புனித ஜோசப்வாஸ்" போன்ற குறும்படங்களையும் தயாரித்து பெயர் பெற்றவர். இதில் "சின்னமுத்தம்" மேடை நாடகமாக இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத் தாபனத்தில் ஒளிபரப்பப்பட்டு, இவரது

திறமை உலகலாவிய ரீதியில் வெளிப்பட்டது. மேலும், புனித ஜோசப்வாஸ் ஆண்டினில் எமது மறைமாவட்டத்தில் ஜோசப்வாஸ் அவர்களின் சரித்திரத்தை கூத்தாக செயற்படுத்தி மட்/மறைமாவட்ட ஆயர் தலைமையில் தாண்டவன்வெளி காணிக்கை மாதா ஆலயத்தில் அரங்கேற்றியமை குறிப்பிடத்தக்கது. அதுமாத்திரமல்ல இக்கூத்தினை பழக்கும்போது இவரே தாளக்கட்டு தொடக்கம் மத்தளத்தை அடித்து அண்ணாவியாராக செயற்பட்டார். பனிச்சையடி, ஆயித்தியமலை போன்ற பங்குகளிலும் இக்கூத்தை மேடையேற்றியமை பாராட்டுக்குரியது. எல்லா கலைஞர்களுடனும் பகிடியாக விடயங்களை பகிரும் ஆற்றல் இவருக்குண்டு.

"பல்சமய ஒன்றியம்" மட்டக்களப்பில் உருவானபோது இவர் இன ஒற்றுமைக்குரிய கலை வடிவங்களை செயல்மூலம் வெளிக்கொணர்ந்தார்.


சமூகத் தொடர்பு நிலையத்தினால் வெளியிடப்படும் "தொண்டன்" சஞ்சிகையில் இவர் தனது ஆக்கங்களை நீண்டகாலமாக எழுதி வந்தவராவார். புனித மரியாள் பேராலயத்தில் வருடா வருடம் இடம்பெறும் "பாஸ்கா" நாட்டிய நாடகத்தில் இவரது பங்களிப்பு மிகவும் முக்கியமானதாக காணப்பட்டது.

எமது மறைமாவட்டத்தைப் பொறுத்தவரை இவ்வாறான விற்பன்னர்களை இழந்து வருவது பெரும் வேதனைக்குரியதாகும். இவ்வேளையில் எமது மறைக்காக எழுத்தாற்றல் மூலம் மக்களின் மனங்களில் இடம்பெற்ற அமரர் கிறேசியன் இராஜேந்திரன் அவர்களையும் நாம் மறந்துவிடலாகாது.

இருதயநாதன் சேர் ஒரு கலைக்களஞ்சியம் என்றே சொல்ல வேண்டும். ஒவ்வொரு மனிதரும் ஒவ்வொரு திறமையுடையவர்கள். ஆனால் எமைவிட்டுப் பிரிந்த இருதயநாதன் சேர் அவர்கள் ஒரு சகலகலா கலைப் பொக்கிஷம் என்றே சொல்லவேண்டும். அந்த அளவிற்கு அவரது கலைப்படைப்புக்கள் அமைந்தள்ளன.

இருதயநாதன் சேர் அவர்கள் காலத்தால் அழியாத கோலமாக இன்றும் இருக்கிறார். எமது மறைமாவட்டத்திற்கு அமரர் அருளிய சேவைகள் என்றென்றைக்கும் நினைவுகூரத்தக்கவை. ■

## பார்வைகள் பலவிதம் - 14




நண்பகல் நேரம் மத்தியான வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. மரத்தடியில் ஒருவன் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தான். அந்த வழியாக வந்த விறகு வெட்டி அவனைப் பார்த்தான். "கடுமையான உழைப்பாளியாக இருக்க வேண்டும். உழைத்த களைப்பால்தான் இந்த வெயிலிலும் இப்படி உறங்குகின்றான்" என நினைத்துக்கொண்டே சென்றான். அடுத்ததாக திருடன் ஒருவன் அந்த வழியாக வந்தான். "இரவு முழுவதும் கண் விழித்து திருடி இருப்பான் போல தெரிகின்றது. அதனால்தான் இந்த சுட்டெரிக்கும் வெயிலிலும் அடித்துப் போட்டதுபோல் தூங்குகின்றான்" என நினைத்துக் கொண்டே சென்றான். மூன்றாவதாக குடிகாரன் ஒருவன் அந்த வழியாக வந்தான். "காலையிலேயே நன்றாகக் குடித்து விட்டான் போல இருக்கிறது. அதனால்தான் குடி மயக்கத்தில் இப்படி விழுந்து கிடக்கிறான்" என நினைத்துக்கொண்டே சென்றான். சிறிது நேரத்தில் துறவி ஒருவர் வந்தார். "இந்த நண்பகலில் இப்படி உறங்கும் இவர் முற்றும் துறந்த ஞானியாகத்தான் இருக்கவேண்டும். வேறு யாரால் இத்தகைய செயலை செய்ய முடியும்" என அவரை வணங்கிவிட்டுச் சென்றார். நாம் எப்படியோ நம் எண்ணங்களும் அப்படியே!

## இனியது இயற்கை

### வன உயிரினங்களைக் கொல்லும் காடழிப்பு

பன்னாட்டளவில் காடழிப்பு மாபெரும் பிரச்சனையாக எழுந்துள்ள போதிலும், ஆசியாவிலும் மற்ற இடங்களிலும் நிகழ்ந்துவரும் காடழிப்பு என்பது நூற்றாண்டுகளுக்கும் மேலான ஒரு பிரச்சினையாக நீண்டுகொண்டே போகிறது. இங்குள்ள காடுகள் வெப்ப மண்டலக் காடுகள் என்று அழைக்கப்படுகின்றன. இப்பகுதிகளில் கட்டுமானப் பொருள்களுக்காகவும் பொழுது போக்குத் தளங்களை ஏற்படுத்துவதற்காகவும் மரங்கள் அதிகளவில் வெட்டப்பட்டு பல்வேறு வழிகளில் கடத்தப்படுகின்றன. எவ்வாறு ஒவ்வாத மாத்திரைகளை நாம் உட்கொள்ளும்போது அது உடலில் பக்கவிளைவுகளை ஏற்படுத்துகின்றனவோ, அவ்வாறே காடுகளை நாம் தொடர்ந்து அழிக்கும்போது அது மனித இனத்திற்குப் பக்க விளைவுகளை ஏற்படுத்துகிறது என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். குறிப்பாக, காடழிப்பால் வன உயிரினங்கள் அழிவதுடன், அதன் அருகிலுள்ள நீர்நிலைகளில் வாழும் மீன் போன்ற நீர்வாழ் உயிரினங்களும் அழிகின்றன. சீனாவிலுள்ள லோஸ் பீடபூமியானது 53 விழுக்காடு முதல் 58 விழுக்காடு வரை காடுகளை உள்ளடக்கியுள்ளது. கடந்த இரண்டு ஆயிரம் ஆண்டுகளாக மனிதர்கள் சீனாவின் மரங்களைத்தான் அதிக அளவில் பயன்படுத்தி வருகின்றனர் என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

- வத்திக்கான் -







– பைந்தமிழ்க்குமரன் டேவிட் –

# 2022 July 28 (சிறுகதை)

ஒரு பாட்டம் நித்திரை இழுத்துச் செல்ல நாசமாய்ப் போன நுளம்புகள் விட்டபாடில்லை. கனவில் கேட்ட மாதிரி ஒரு குரல், "கேஸ் குடுபடப் போகுதாம்". திடுதிப்பென்று எழும்பிய அருள் ஐயா மனைவியை அரட்டினார்.

"இஞ்சே கேஸ் குடுபடப் போகுதாமே" என்றார். "ஓமோம் உங்களுக்கு ஆரப்பா சொன்னது..." என்றபடி கட்டிலை விட்டு எழும்பி வந்தாள். நேரம் இரவு ஒன்பது நாற்பது.

"ஆரோ சொல்லி உசுப்பிவிட்ட மாதிரி இருந்திச்சு, அதுதான் துடிச்சுப் பதைச்ச எழும்பினன்" என்று கூறியபடியே குசினிக்குள் நுழைந்து தூசி படிந்து கிடந்த வெற்றுச் சிலின்டரை இழுத்து வந்து பழைய துணியால் சடார் படார் என்று அடிக்கத் தொடங்கினார். குழாய் பொருத்தி இறுக்கிவிடும் வாய்ப்பகுதியில் குளவி கூடுகட்டி முட்டைமிட்டு குஞ்சும் குராலுமாக இருந்தது ஐயாவுக்கு தெரியாது. விண்ணென்றது கை. குடும்பம் நடத்தின குளவிகள் தொடுத்த அட்டாக்கில் ஆடிப்போன ஐயா, "ஐயோ..." என்று கத்தினபடியே குந்தினார். "அப்பா என்னப்பா..." என்றபடியே மகனும் மகளும் ஓடி வந்தனர். டோர்ச் அடித்துப் பார்த்தால் குளவிக்கூடு உடைந்து குஞ்சுகள் புழுக்கள் கிடக்க குளவிகள் மறுதாக்குதல் நடத்த துரத்தத் தொடங்கின. தும்புத்தடியால் வீசினாள் மனைவி. குளவிகள் யு ரேன் போட்டு எஸ்கேப் ஆகிவிட சுவரிலே பட்டு தும்புத்தடி உடைந்து விழுந்தது. "சனியன் குளவிகள் திரும்பவும் வருதுகள்....." என்றபடி எழும்பின அருள் ஐயா ஒரு மாதிரியா தட்டித் துடைத்து மகனையும் கூட்டிக்கொண்டு அம்மன் கோயிலடிக்குப் போனார். அதிர்ச்சி காத்திருந்தது. ஏலவே பல சிலின்டர்கள் கோர்வை செய்யப்பட்டிருக்க 1A, 1B, 1C ... என்று கிராம சேவகர் பிரிவுகளைக் குறிக்கும் அட்டைகள் தொங்குவதை கண்டு விசாரிச்சுப் பார்த்தார்....

ஒரு டிவிசனுக்கு ஐம்பது சிலின்டர்தானாம் என்ற செய்தி கேட்டு பதறிக் கொண்டு தங்கட வரிசைக்குள்ளால ஓடிப்போனா ஏலவே நாற்பத்தொன்பது சிலின்டர்கள் குந்திக்கொண்டிருந்தன. ஐம்பதாவதாக தங்கட சிலிண்டர வெச்சி உள்ளால ஓடின கயித்தயும் சேர்த்து கோர்த்துக் கட்டிப்போட்டு,

"மகன் நீ போ மகன்" என்றார். "அப்பா நீங்க போய் தூங்குங்க.... சாமத்தால அஞ்சி மணிக்கு வாங்க.... நான் ஆக்களோட நிக்கிறன்..." என்கிறான். அரை மனசுடன் வீடு வரும்போது, 'பாவம் பொடியன்' என்று மனசு அடிக்கிறது. அதிகாலை பள்ளி வாசல் பாங்குச் சத்தம் கேட்டதும் எழும்பி தண்ணியை சுடவைத்து கோப்பி போட்டுக் குடித்தார். ஓட்டமும் நடையுமாக கோவிலடிக்குப் போய்,

"நீ வீட்ட போ மகன்.... கொஞ்சமெண்டாலும் தூங்கலாம் மகன்...." அவனை அனுப்பியவர் சுற்றும் முற்றும் பார்க்கிறார்...

சனம் என்னமா எஞ்ஜோய் பண்ணுதுகள் சாமி.... சுடுதண்ணிப் போத்தலில் பிளேன்ரி வந்து அஞ்சாறு பொண்டுகள் மாறி மாறிக் குடிக்குதுகள்.... இஞ்சால உள்ளங்கைக்குள்ள வெத்தில பாக்கு நசிக்கிச் சுருட்டி குதப்பித் துப்புதுகள் கிழவிகள். மரத்தடியில நாலஞ்சு பெரிசுகள் நீட்டி நிமிர்ந்து படுத்து குறட்டை விடுதுகள். காது கொடுத்தார் ஐயா. ஒவ்வொரு குறட்டையும் ஒவ்வொரு சுருதியில் ஆரோகணம் அவரோகணமாய் விட்டு விட்டுக் கேட்கிறது. இன்னும் இரண்டு

மைக்கையும் சென்சிவ் ஆக்கினார்: கூர்ந்து கேட்டுப் பார்க்கிறார். இந்தக் குறட்டை கல்யாணியா? காம்போதியா? அந்தக் குறட்டை ஸஹானாவா? ஹரஹரப்பிரியாவா? கண்டு பிடிக்க முயற்சிக்கிறார். முடியவில்லை. இந்தப் பக்கம் திரும்பினா பொடி பொட்டயள் கூடியிருந்து பொல் ரொட்டியும் கட்டச் சம்பலும் தின்னுதுகள். சிரிப்பும் கும்மாளமும் கலகலப்புந்தான் போங்க... ஐயா பெருமூச்சு விட்டார். அங்கொருத்தி தன்ர புருஷன் பெற்றோல் செட்ல காட்டின வீரபிரதாபங்களை மூச்சு விடாமல் சொல்லிக்கொண்டிருக்க, 'இவளொருத்தி அவளின்ர வாயில் அடுப்பு பத்தவெக்கலாம் போல' என்று இன்னொருத்தி சொல்ல ஐயா சிரித்தார். நேரம் நழுவியது. ஏழரை எட்டுமணியாக ஐயா நடந்து கிணற்றடிக்குப் பக்கத்தில இருந்த நீர்த் தொட்டியின் விளிம்பில் குந்தினார். பக்கத்தில ஒரு குண்டு மனிசன் சத்தமாக கைபேசியில் பேசுகிறான்...

“சுகந்தி என்ர மனிசியின்ர அதான் உன்ர அக்காட நச்சரிப்பு தாங்கேலாமத்தான் உங்கட சிலின்டரையும் கொண்டாந்து இருபத்தாறு இருபத்தேழாவதாக வச்சிற்று காவல் கிடக்கிறன். விடிஞ்சி எட்டு மணியும் ஆகுது. பல்லுத் தேய்க்கயுமில்ல .... ரொயிலட் போகோணும். உன்ர புருசனக் கொஞ்சம் அனுப்பியுடன்....” என்கிறான். “அந்த மனிசன் இன்னமே எழும்பல்ல.... அவரு வரமாட்டாரு.... நீங்கதான் அத்தான் பாத்து... எப்புடியெண்டாலும் ....” அவள் சொல்லும்போதே அவன் பெரிய மணக்குண்டொன்றை தள்ளிவிட்டான் போலும்.... ஏரியா முழுதும் நாற்றம் பரவ, அருள் ஐயாவின் தலை சுற்றியது. அவர் காறித் துப்பவும் அவன் போன் கதைத்தபடியே தெற்கு நோக்கி நடந்து போனான். நேரம் தட்டித் தடக்கி மதியமாகின்றது. பசியும் தண்ணீர் விடாயும் வாட்டியெடுக்க நண்பகல் தாண்டியும் இரண்டு மணியளவில்தான் நீளமான லொறி உள்ளிட்டது. பரந்து கிடந்தவர்கள் அடிச்சிப் புடிச்சி நெருக்கி முண்டியடித்து தங்கள் சிலின்டருக்குப் பக்கத்தில போய் நிற்க, "மனிச வெக்க பொல்லாதது..." என்கிறான் ஒருவன். ஐயாவுக்கு கடும் களைப்பு. தொண்டை வரண்டு கண்கள் இருட்டி என்னமோ செய்கிறது. வரிசைகள் நகருகின்றன.

"மிச்சம் மீதி தரமாட்டானுகள் காச மாத்தி வையுங்க..." என்றொரு பெண் சொல்ல, ஐயாவும் தயாரா எடுத்துக்கொண்டு நிமிர என்ன மாயமோ எப்பிடிச் சொருகினார்களோ அவரின் சிலிண்டர் ஐம்பத்தொன்றாக மாறியிருந்து. இழுத்துக்கொண்டு முன்னேறுகிறார்.

"இந்த டிவிஷன் ஐம்பது கொடுத்து முடிஞ்சுது. இனி அடுத்த ரேண்லதான் கிடைக்கும். வாறகிழமை போலதான் வரும். நீங்க போகலாம்...." சொற்கள் காதுகளில் விழும்போது அருள் ஐயா சோர்ந்து விழுகின்றார். ■

**தொண்டன் வாசகர்களே!**

அச்சுப் பதிப்பு மற்றும் தபால் செலவுகள் அதிகரித்துள்ள காரணத்தினால், இம் மாதத்திலிருந்து "தொண்டன்" சஞ்சிகை ஒன்றின் விலை ரூபா. 80 ஆக உயர்ந்துள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

- ஆசிரியர்

எவன் ஒருவன் தன் அறிவின் அகந்தையால் பிறரை அவமதிக்கிறானோ, அவன் மந்த புத்தியுடையவன்!

உலகை அறிந்தவன் வெட்கப்பட மாட்டான்! தன்னை அறிந்தவன் ஆணவமாயிருக்க மாட்டான்.

## நீரிழிவு
### கட்டுப்படுத்தக்கூடிய மாத்திரைகள் கண்டுபிடிப்பு




ருஹுணு பல்கலைக்கழகத்தின் கராபிட்டிய மருத்துவ பீடத்தின் ஆய்வுக் குழுவொன்று, கோவக்கா செடியின் இலைகளைப் பயன்படுத்தி இரத்தத்தில் உள்ள சீனியின் அளவைக் குறைக்கும் மற்றும் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தக்கூடிய மாத்திரைகளை கண்டுபிடித்துள்ளது.

காலி கராபிட்டிய மருத்துவ பீட கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் முதன்முறையாக இந்த மாத்திரை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த மருந்துக்கான காப்புரிமையையும் ஆய்வுக்குழு பெற்றுள்ளது. பேராசிரியர் டி. பி. வீரரத்ன, கலாநிதி கே.பி.ஜி.வாசனா, பேராசிரியர் கே.ஏ.பி.டபிள்யூ. ஜயதிலக, பேராசி ரியர் ஏ.பி. அத்தநாயக்கவின் ஆய்வுக் குழுவினர் இந்தப் புதிய மருந்தைக் கண்டு பிடித்துள்ளனர்.

158 நீரிழிவு நோயாளிகளிடம் நடத்தப்பட்ட ஆய்வில், இந்த மருந்தின் மூலம் சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்த முடியும் என்பதும், மருந்தை உட்கொள்வதால் எந்தவித பக்கவிளைவுகளும் ஏற்படாது என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

வணிக ரீதியில் புதிய மருந்து விரைவில் சந்தைக்கு அறிமுகம் செய்யப்படும் என பேராசிரியர் டி.பி. வீரரத்ன தெரிவித்தார். இந்நிகழ்வில் ரு/ஹுணு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் சுஜீவ அமரசேனவும் கலந்துகொண்டார்.



# (சோ)சாதனை


– ந. பார்த்தீபன் –
ஓய்வுநிலை உப பீடாதிபதி
வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி.


தொடர்..... 3

ரவி சொன்ன விடயம் மாமிக்கும் தெரிந்திருக்கும் என நினைத்துக் கதையைக் கொடுத்தேன்.

"மாமி நூறு ஆண்டு என்பது பெரிய விஷயம். அதுதான் சாதனையாளர் சரஸ்வதி என்று கொண்டாடப்போகிறோம்" என்றேன்.

"டேய் பாபு, தம்பி... ஏன் இந்த பைத்தியக்காரத் துவக்கம்? வேண்டாமடா..., நீதான் உவன் ரவியனுக்கும் சொல்ல வேண்டும்" என என்னைக் கேட்டுக்கொண்டார்.

"இல்லை மாமி துரை மச்சானும் பஞ்சன் மச்சானும் வந்து போக விரும்புகிறார்கள். கொண்டாடினால் வந்து போவார்கள் போலிருக்கு..." ஒரு தூண்டில் போட்டேன்.

ஒரு கணம் யோசிக்கின்றார்... பிறகு "அவங்களுக்கு பிள்ளைகளின்ரை படிப்பு, லீவுப் பிரச்சினை... இனி வந்து போவது எவ்வளவு கரைச்சல்..."

'வாங்கோ என்று சொல்லவும் வரவேண்டாம் என்று சொல்லவும் முடியாத திரிசங்கு சொர்க்க நிலையில் மாமி தனக்குள் ஒரு கணம் உறைந்து போகிறார்.... அவரின் கோலத்தை பார்க்கக் கவலையாக இருக்கிறது. எலும்பும் தோலுமான உருவமாகி சிறுத்துப் போய் ஒரு சின்ன குழந்தை போல இருக்கிறார். தொள தொளத்த வெள்ளைப் பிளவுஸ், இடுப்பில் பலவர்ண சீத்தை லுங்கி, நெற்றியில் விபூதி, குழிவிழுந்த கன்னம், வெள்ளைப் பஞ்சாகத் தலைமயிர்.... அந்த மூக்கும் முழியும் மட்டும் அப்படியே இருக்கிறது.

மாமி எப்போதும் தன் சுத்தத்தில் மிகவும் கவனம். பார்வை மங்கலான போதும் தன்னைக் கவனித்துக் கொள்ளும்... சுத்தம்... அவரிடம் எபோதும் இருக்கிறது.

எப்போதும் தன்னை வந்து பார்ப்பவர்களிடம், அவருடைய குடும்பம், பிள்ளைகள், படிப்பு, உடல் நலம் என்பவற்றை விசாரித்துக் கொள்வார்.

"ஏன். உன்ரை தம்பி என்னட்டை வரவில்லை. ஏதும் கோபமோ? நான் அவனுக்கு ஒரு பிழையும் விடவில்லை...." போன்ற சம்பாஷனைகள் வழமை போல் இருந்தன.

எல்லோரிடமும் "என்ரை விதியைப் பார்... இப்ப இருபது இருபத்திரண்டு வருசமாய் இப்படி ஆகிப்போனேன்.... ஏதோ நான் செய்த புண்ணியம் அவர் இருந்தார். பிறகு ரவியன். இப்ப மருமகள் என எப்பொழுதும் ஒரு குறையும் இல்லாமல்... சீ... தூ... என்று சொல்லாமல் பிள்ளை போலப் பார்த்தெடுக்குதுகள்" எனச் சொல்லிக் கண் கலங்குவார்.

உண்மையில் மாமி கொடுத்து வைத்தவர்தான். அதனால்தான் இந்த நூற்றாண்டு விழாவை எல்லோரும் கொண்டாட விரும்புகிறோம்.

"தம்பி டேய் பாபு ... இங்கை வா நான் இப்போதும் நடந்து திரிந்து என்னுடைய வேலையை நானே பாத்துச் செய்திருந்தால் அது வேறைநடக்காதது போல கிடக்கிறது தான் என்ரை வேலை.... நடைப்பிணம் என்பது போல் நான் கிடைப்பிணமடா. அதுதான் உந்தத் துவக்கம் வேண்டாமெண்டிறன். நான் இவ்வளவு காலமும் இருக்கிறதே ஒரு பெரிய சுமையடா. இண்டைக்கோ நாளைக்கோ என்று கிடக்கிறன். என்னைக் கொண்டு போய் அங்கை இங்கையென்று அலைக்கழிக்க இனசனம் உங்களைத்தான் பேசும். பேசாமல் விடுங்கோ..."

மாமி நல்ல தெளிவாகப் பேசினார்.

ரவியும் நானும் எப்படியாவது சாதனை விழாவைச் செய்திட வேண்டும் என்ற ஆயத்தத்தில்...

இன்னும் பத்து நாள் இருக்குது தானே... என்று நான் நினைத்துக் கொண்டிருக்கும்போது 'மாமி தவறிவிட்டார்' என்ற செய்தி எனக்குக் கிடைக்கிறது.

** முற்றும்.**

# போராட்ட வாழ்வை

## பூந்தோட்டமாக்க உதவுவோம்



ஒரு நாள் மாணவன் ஒருவன் தன்னுடைய ஆசிரியர் வீட்டிற்குச் சென்றிருந்தான். "வா மகனே" என்று அவனை அன்போடு வரவேற்ற ஆசிரியர், "இந்த நாற்காலியில் உட்காருப்பா" என்று அவனை அமரவைத்து பேசிக்கொண்டிருந்தார். சிறிதுநேரம் சென்று தேனீர் கொண்டுவந்து கொடுத்தார் ஆசிரியர். அதைக் குடிக்காமல் அந்தக் கப்பிலுள்ள தேனீரையே மிரள மிரளப் பார்த்துக்கொண்டிருந்தான் மாணவன். "குடி குடி..." என்று சொல்லிக்கொண்டே இருந்தார் ஆசிரியர். ஆனால் அந்த மாணவனோ தேனீரைக் குடிப்பதாகத் தெரியவில்லை. அதனால் ஆசிரியர் மாணவனைப் பார்த்து, தம்பி உனக்கு என்னதான் பிரச்சனை அப்படின்னு கேட்டுவிட்டு அந்த தேனீர் கோப்பையை வாங்கிப் பார்த்தார். அந்தத் தேனீருக்குள் ஒரு ஈ தத்தளித்துக்கொண்டிருந்தது. உடனே ஆசிரியர் வாசலுக்கு ஓடிப்போய் ஓர் இலையைப் பறித்துவந்து, அந்த ஈயை எடுத்து அந்த இலைமேல் வைத்தார். உடனே அந்த ஈ, அது உடம்பிலிருந்த ஈரம் காய்ந்தவுடன் ஒரு நொடியில் பறந்துபோனது. பின்னர் ஆசிரியர் வீட்டுக்குள் வந்து, மாணவனிடம், "ஆனாலும் தம்பி, உனக்கு இவ்வளவு அகங்காரம் கூடாது" என்று சொன்னார். மாணவனுக்கு ஒன்றும் புரியவில்லை. "சேர், நீங்க தேனீரைக் கொடுத்தவுடனேயே குடிக்கத்தான் போனேன். ஆனால், அதில் ஈயைப் பார்த்ததும், அதைச் சொன்னால், உங்களது மனது கஷ்டப்படும் என நினைத்து, என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறிக்கொண்டிருந்தேன்..." என்றான் மாணவன். அதற்கு ஆசிரியர், "தம்பி தேனீரில் ஈயைப் பார்த்தவுடன், அதைக் குடிக்கிறதா, வேண்டாமா என்ற பிரச்சினை உனக்கு, ஆனால், அந்த ஈக்கு வாழ்வா சாவா என்ற உயிர் பிரச்சினை, உன்னை மையப்படுத்தியே நினைத்துக் கொண்டிருந்தாயே, அதனால்தான் உன்னை அகங்காரம் பிடித்தவன் என்று சொன்னேன்" என்றார்.

இன்று சமுதாயத்தில் பலர் மற்றவர்களைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. பலரிடம் பேசும்போது இதை நாம் கவனித்திருக்கலாம். தங்களின் சாதனைகள், சொத்து சுகம், செல்வம், வசதி வாய்ப்புகள் வேலை இப்படியே பெருமை பேசிக்கொண்டிருப்பார்கள். மற்றவர்களை இவர்கள் ஒரு பொருட்டாகவே கருதமாட்டார்கள். இந்த பிரபஞ்சத்தில் இவர்கள் வாழ்வில் மற்ற மனிதருக்கு இடமே கிடையாது. இந்த மனிதர்களுக்கு மத்தியில், வாழ்வா சாவா என்ற பிரச்சினையில் வாழ்ந்து வருபவர் பலர் உள்ளனர்.

உக்ரைன் போர் போன்று, உலகின் சில பகுதிகளில் இடம் பெறும் போர்கள், வன்முறைத் தாக்குதல்கள், வறட்சி, பஞ்சம், புயல், வெள்ளம், நில அதிர்வு போன்ற வற்றால் கடுந்துயர்களை எதிர்கொள்ளும் மக்களுக்கு இந்தப் பிரச்சினை அதிகமாகவே உள்ளது. இத்தகைய பிரச்சினைகளால் பெண்களும், சிறாரும்தான் அதிகமாக இன்னலுக்கு உள்ளாகின்றனர். போர்களில் எத்தனையோ இளம் தாய்மார் கணவர்களை இழந்து குடும்பப் பாரத்தைச் சுமந்து வருகின்றனர். கைம்பெண்களின் நிலை குறித்த விழிப்புணர்வை உருவாக்கி, அவர்களின் உரிமைகளை மீட்டெடுத்து, அவர்கள் மாண்புடன் வாழ வழியமைக்கும் நோக்கத்தில், ஐ.நா. நிறுவனம் 2010ம் ஆண்டில் உலக கைம்பெண்கள் நாளை உருவாக்கி, ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 23ம் தேதி அந்நாளைக் கடைப்பிடித்து வருகிறது. இன்று உலகில் ஏறத்தாழ 35 கோடி கைம்பெண்கள் உள்ளனர் என்று, ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் ஒரு புள்ளிவிவரம் கூறுகிறது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வத்திக்கானின் புனித பேதுரு வளாகத்தில் கூடியிருந்த மக்களுக்கு ஆற்றிய மூவேளை செப உரைக்குப்பின், அம் மக்களிடம், போரினால் துன்புறும் மக்களுக்கு என்ன செய்கின்றீர்கள் என உங்களையே கேளுங்கள் என்று கூறினார். நாமும், அப்போர் உட்பட பல்வேறு காரணங்களால் துன்பங்களை எதிர்கொள்கின்ற மக்களுக்காக, குறிப்பாக கைம்பெண்களுக்காக என்ன செய்கிறோம் என மனப் பரிசோதனை செய்வோம். மற்றவர் வாழ்வையும் பூந்தோட்டமாக்குவோம்.

– வத்திக்கான்



**வினாவிடைப் போட்டிக்கான அனுசரணை வழங்குபவர் :** திரு. M.M. ஜெஸ்லிராஜ், M.J. மெகா எலெக்ரோனிக்ஸ் அண்ட் பேணிச்சர்ஸ்,142 A, விபுலானந்தபுரம், மயிலம்பாவெளி, மட்டக்களப்பு. தொ.எண்: 0779780151, 0775019977

## வினாவிடைப் போட்டி இல. - 40

1) இறைவாக்கினர் யோபு உயிர்த்த வாழ்வுக்கு எவ்வாறு சான்று பகிர்ந்துள்ளார்?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

2) திருத்தூதர் பவுலடியார் புயலில் சிக்கி கடலில் நீந்தி வந்து கரை ஒதுங்கிய இடம் எது?

..........................................................................................................

3) ஓட்டிசத்தால் (Autism) பாதிக்கப்பட்டோரின் நடத்தை கோலங்கள் என்ன?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

4) வத்திக்கானில் இருந்து வெளிவரும் நாளிதழின் பெயர் என்ன?

..........................................................................................................

5) வத்திக்கானில் உள்ள உலக ஆயர்கள் மாமன்றத்தின் செயலர் யார்?

..........................................................................................................

6) உலகின் மிக உப்பு நிறைந்த நீர் எங்கு காணப்படுகின்றது?

..........................................................................................................

7) "மற்றவர்களுக்கு நன்மை வேண்டும் என்று நினைப்பவன் தனக்கான நன்மையை ஏற்கெனவே சம்பாதித்துவிட்டான்" என கூறியவர் யார்? ..........................................

8) புனித அன்னை தெரேசா நற்கருணையைப் பற்றி பகிர்ந்துள்ள வசனம் என்ன?

..........................................................................................................

..........................................................................................................

9) புனித தேவசகாயம் அவர்களை திருஅவையில் புனிதராக அதிகாரபூர்வமாக அறிவித்த நாள் எது? ..........................................................................................

10) பெந்தகோஸ்தே பாரம்பரியமாக திருச்சபையின் எதனை குறித்து நிற்கின்றது?

..........................................................................................................

பெயர் : ..............................................................

முகவரி : ..............................................................

..............................................................

பங்கு / தொ.பே.இல : ..............................................................

அனுப்ப வேண்டிய தபாலகம் : ..............................................................

முடிவுத் திகதி : 31.10.2022

அனுப்பவேண்டிய முகவரி :

**வினாவிடைப் போட்டி - 40**
**"தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**




பரிசுப் போட்டி

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத் திகதி

**31.10.2022**

**சரியான விடைகளை திருத்தூதர்பணி 1:20 ஆகிய பகுதியில் இருந்து தெரிந்து எழுதவும்**

1. இயேசுவின் சீடர்களும் தாய் மரியாவும் தூய ஆவியினால் எவ்வாறு ஆட்கொள்ளப்பட்டனர்? ........................................................................................................................................................................................................................................
2. பிறவியிலேயே கால் ஊனமுற்றிருந்த ஒருவரை குணமாக்கிய இயேசுவின் சீடர் யார்? ....................................................................................
3. நற்சான்று பெற்றவர்களும் தூய ஆவியின் அருளும் வல்லமையும் ஞானமும் நிறைந்தவர்களான ஏழு திருத்தொண்டர்களும் யார்? ........................................................................................................
4. "நீ உன் நாட்டிலிருந்தும் உன் ............................................ புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் ............................. செல்".
5. சமாரியா நகர் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் எவ்வாறு அழைக்கப்பட்டது? ........................................................................................................
6. பேதுரு யாருடைய பிணியை நீக்கினார்? ........................................................................................................
7. பர்னபாவும், சவுலும் பாப்போ என்ற இடத்தில் கண்ட போலி இறைவாக்கினனின் பெயர்என்ன? ........................................................................................................
8. லிஸ்திராவில் பவுலையும் பர்னபாவையும் எவ்வாறு அழைத்தார்கள்? ........................................................................................................
9. 'பெந்தகோஸ்து" என்னும் சொல்லுக்கு பொருள் என்ன? ........................................................................................................
10. யூதாசுக்குபதிலாக சீட்டுக் குலுக்கிப் போட்டு யாரை தேர்ந்து கொண்டனர்? ........................................................................................................

**பெயர் :** ................................................

**முகவரி :** ................................................

................................................

................................................

**பங்கு / தொ.பே.இல :** ..............................

**அனுப்ப வேண்டிய தபாலகம் :** .....................

................................................

<u>அனுப்பவேண்டிய முகவரி :</u>

**திருவிவிலியம் கற்போம் - 218**
**'தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**

**(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)**




# போட்டி முடிவுகள்!



**திருவிவிலியம் கற்போம் – 216 விடைகள்**

1. எபேசு, சிமிர்னா, பெர்காம், தியத்திரா, சர்தை, பிலதெல்பியா இலவோதிக்கேயா
2. பெர்காம்
3. யூத குலத்தின் சிங்கமும், தாவீதின் குல கொழுந்துமானவர் வெற்றி பெற்று விட்டார்
4. ஓர் இலட்சத்து நாற்பத்து நான்கு ஆயிரம்
5. அழிப்பேன்
6. மிக்கேலும் அவருடைய தூதர்களும்
7. ஆண்டவரோடு
8. யூப்பிரத்தீசு பேராற்றில்
9. ஆண்டவரை போற்றுங்கள்
10. நம்பிக்கைக்குரியவர், உண்மையுள்ளவர்

**பரிசுகள் – அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

**போட்டியில் சரியான விடைகளை எழுதி ரூபா 400/= பரிசு பெறுவோர்:**

போட்டியில் பங்குபற்றியோர் – 15 பேர்
சரியான விடையளித்தோர் – 08 பேர்

* **ரா. கிறிஸ்,**
ஆறுமுத்தான் குடியிருப்பு,
தன்னாமுனை.

* **S. குளோறி,**
பார் வீதி,
மட்டக்களப்பு.

* **இ. ஜெபிசன்,**
சாஸ்திரியார் வீதி,
மாங்காடு, செட்டிபாளையம்,
தேற்றாத்தீவு.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 169 முடிவுகள்**

**1ம் பரிசு - 400/=**

* **ஜோ. அக்ஷய்,**
வட்டை விதானை வீதி,
பெரிய நீலாவணை - 01.

**2ம் பரிசு - 300/=**

* **செ. ஜக்வீனன்,**
திருவள்ளுவர் வீதி,
மட்டக்களப்பு.

**3ம் பரிசு - 200/=**


* **ம. அனோக்ஷன்,**
விபுலானந்தபுரம்,
மயிலம்பாவெளி.

பங்குபற்றியோர் – 15

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. **(ஆ - ர்)**

## தொலைவாகப் போய்விடாமல்

# பார்த்துக்கொள்ளுங்கள்



ஒரு துறவி கங்கையில் குளித்துவிட்டுக் கரை யேறும் சமயம், அவ்விடத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் சத்தம் போட்டு ஒருவரை ஒருவர் திட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அதைப் பார்த்த துறவி, தன் சீடர்களிடம் திரும்பி சிரித்துக்கொண்டே கேட்கிறார், "ஏன் மனிதர்கள் கோபத்தில் இருக்கும்போது ஒருவரை ஒருவர் பார்த்து சத்தம் போட்டு சண்டை பிடிக்கிறார்கள்?"

சீடர்கள் சில நிமிடங்கள் சிந்திக்கிறார்கள்.....

பின்னர் சீடர்களில் ஒருவர் கோபத்தில், "நாம் அமைதியை இழக்கிறோம், அதனால் சத்தமிடுகிறோம்"

அதற்கு துறவி, "ஆனால் உனக்கு மிக சமீபத்தில் இருக்கும் நபரிடம் ஏன் சத்தமிடுகிறாய்? அவர்கள் உன்னருகில்தானே நிற்கிறார்கள்! நீ சொல்ல வேண்டி யதை அவர்களுக்கு மட்டும் கேட்கும் விதமாக எடுத்து ரைக்கலாமே!"

ஒவ்வொரு சீடரும் ஒவ்வொரு காரணம் சொல்கிறார்கள் ... ஆனால் எந்த காரணத்திலும் அடுத்தவர்களுக்கு உடன்பாடில்லை!

கடைசியாக துறவி பதில் கூறுகிறார்.....

"எப்பொழுது இரு மனிதர்கள், ஒருவர் மீது ஒருவர் கோபம் கொள்கிறார்களோ, அப்பொழுதே அவர்களின் மனது இரண்டும் வெகு தொலைவுக்குச் சென்று விடுகிறது! எனவே தூரத்தில் இருக்கும் மனதுக்கு கேட்க வேண்டும் என்பதற்காகவே, சத்தமிடுகிறார்கள்! மனது எவ்வளவு தூரம் விலகி நிற்கிறதோ, அவ்வளவு தூரம் அவர்கள் தங்கள் ஆற்றலை உபயோகித்து சத்தம் போட வேண்டியிருக்கும்! அப்பொழுதுதானே தங்கள் கருத்து வெகு தொலைவில் இருக்கும் மனதைச் சென்றடையும்! ஆனால் இதுவே, இரு மனிதர்கள் ஒருவர் மீது ஒருவர் அன்பாக இருக்கும்போது என்ன நடக்கிறது? அவர்கள் ஒருவரைப் பார்த்து ஒருவர் சத்தமிடுவதில்லை! அமைதியாகவும், அன்பான முறையிலும் தங்கள் கருத் துகளை வெளிப்படுத்துவார்கள்! காரணம் அவர்களின் மனது இரண்டும் வெகு சமீபத்திலே இருக்கும்: மனதிற்கு இடையேயான தூரம், மிகக் குறைவாக இருக்கும் அல்லது மனதிரண்டும் ஒன்றோடு ஒன்று இணைந்தே இருக்கும்!"

துறவி தொடர்ந்து கூறுகிறார்.....

"இதைவிடவும் அதிகமாக ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தும்போது என்ன நடக்கும்? அவர்கள் ஒருவருக் கொருவர் சத்தமாக பேச தேவையிருக்காது! அவர்க ளின் மனதுகள் இரண்டும் கிசுகிசுப்பாக பேசுவதில் இருந்தே, அவர்களின் கருத்துகள் பரிமாறப்படும்! இன் னும் இன்னும் அன்பு அதிகமாகும்போது வார்த்தையே தேவைப்படாது! அவர்கள் கண்கள் ஒருவரை ஒருவர் பார்க்கும்போதே, மனதின் எண்ணங்கள் வெளிப்பட்டு விடும்!"

துறவி கடைசியாக சீடர்களைப் பார்த்து,

"அதனால் நீங்கள் ஒருவருடன் ஒருவர் வாதிடும் போது, உங்கள் மனதுகள் இரண்டும் தொலைவாகப் போய்விடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். மனதின் தொலைவை அதிகப்படுத்தும் வார்த்தைகளை உபயோ கப்படுத்தாதீர்கள். அப்படி செய்யாமல்போனால், ஒரு நாள் உங்கள் மனங்களிரண்டின் தூரம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாகி, கடைசியில் ஒன்றுசேரும் பாதையே அடைக்கப்பட்டு விடும் நிலை வந்துவிடும்" என்றார். ■■■■

## அற்புதப் பொன்மொழிகள்

'பேச்சு' பெரிதுதான்; ஆனால், 'மௌனம்' அதனிலும் பெரிது.

✷

உண்மையான பெரிய மனிதனுக்கு முதல் அடையாளம் 'பணிவு'.

✷

காற்றடிக்கும் திசையில் காற்றாடி பறந்தாலும் நூல் நம் கையில் இருக்க வேண்டும். அதைப்போல் உணர்ச்சிகள் கொந்தளிக்கும்போது மனம் என்ற சூத்திரக்கயிற்றை நாம் நம் வசம் எப்போதும் வைத்திருக்க வேண்டும்.

✷

கோபத்தை எவன் ஒருவன் தணிக்கிறானோ அவன் வாழ்க்கை முன்னேறும். அந்த கோபத்தை தணிப்பதற்குரிய சாதனங்களே சிரிப்பும் மகிழ்ச்சியும்.

## மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் புதிய இரண்டு திருத்தொண்டர்கள்





முதல்நன்மை உறுதிப்பூசுதல் - கல்லாறு



முதல்நன்மை உறுதிப்பூசுதல் - வாகரை



திருப்பாலத்துவ சபை - சின்னம் வழங்கும் நிகழ்வு
- தாண்டவன்வெளி -



திருப்பாலத்துவ சபை - சின்னம் வழங்கும் நிகழ்வு
- கல்முனை -



## ஆயித்தியமலை சதாசகாய அன்னைத் திருத்தல திருவிழா திருப்பலி நிகழ்வுகள்



